2021 Thinakaran and Vaaramanjari paper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -
E Paper

மின்னிதழ்
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 நவம்பர் 19 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 274 | Saturday 19, November, 2022 | 14 பக்கங்கள்

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறல்:

## சந்தேக நபரான சட்டத்தரணி நீதிமன்றில் சரணடைந்தார்

கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி, அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக கூறி கோட்டை நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் வழக்கில் 59 ஆவது சந்தேக நபராக சிரேஷ்ட சட்டத்தரணி நுவன் போப்பகேயின் பெயரை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து அவர் (17) கோட்டை நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். 06

## சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு நபர்களை அனுப்பினால் தண்டனை

**முகவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை**
**ஓமான் விவகாரம் தொடர்பிலும் சிலர் கைது**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றுலா விசா மூலம் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கு மக்களை அனுப்பும் முகவர்கள் தொடர்பில் கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுற்றுலா விசா மூலம் பெண்களை ஓமானுக்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களை விற்பனை 06

## புலம்பெயர் இலங்கையருக்கான விசேட பணியகம் டிசம்பரில் திறப்பு

**வெளிநாட்டமைச்சின் கீழ் இயங்கவும் ஏற்பாடு**

வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த மக்கள் இலங்கைக்கு உதவுவதற்காக 'வெளிநாடு வாழ் இலங்கையர் பணியகம்' என்ற பெயரில் நிறுவனமொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின்



கண்காணிப்பின் கீழியங்கும் இந்த பணியகம் எதிர்வரும் டிசம்பர் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் நேரடியாக இந்த பணியகத்துடன் சம்பந்தப்பட்டு இலங்கையின் பணிகளுக்கு உதவ முடியும். 06

## டொலரின் பெறுமதியை குறைக்க வட்டி வீதங்களை குறைக்கவும்

**சபையில் ஐ.தே.க MP வஜிர அபேவர்த்தன**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டால் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலையை 360 ரூபாவுக்கும் கீழே கொண்டு வர முடியுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்



பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். 06

ஜனாதிபதி இதய சுத்தியுடன் பேச்சு நடத்த முன்வந்தால்

# சமஷ்டி முறையிலான தீர்வு பேச்சு நடத்த TNA தயார்



**பாராளுமன்றத்தில் நேற்று சிறிதரன் M.P தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதய சுத்தியுடன் முன் வருவாரானால் சமஷ்டி முறையில் தீர்வை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாரென எஸ்.சிறிதரன் எம்.பி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

**இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண சமஷ்டி முறையில் ஆட்சி முறையை எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் சிறிதரன் M.P சபையில் சுட்டிக்காட்டு**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான நான்காவது நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அரச தலைவர்கள் மத்தியில் காணப்படும் இனவாதம் மற்றும் மதவாத சிந்தனைகள் ஒருபோதும் பொருளாதாரத்தை மேம்படுத்த இடமளிக்காது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து வாருங்கள். தீர்வை கையில் வைத்துள்ளோம் என்று உறக்கத்தில் இருந்து எழுந்தவர்களைப் போல அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோர் அழைப்பு விடுக்கின்றனர்.

இவர்கள் உலகத்தை முழுமையாக ஏமாற்றும் வகையில் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு விதமாக பேசுகிறார்கள்.

அந்த வகையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நாட்டில் சமஷ்டி ஆட்சி முறைமையை எவ்வாறு 06

ஒரு பில். அமெ. டொலர் முதலீடு

## 'தாமரைக் கோபுரம்' பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி

**இலங்கை – சிங்கப்பூர் உடன்படிக்கை கைச்சாத்து**




படம்: விமல் கருணாதிலக்க

கொழும்பு தாமரைக் கோபுரத்தை மையப்படுத்தியதாக நீர் சறுக்கு விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு வலயம் ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் *kreate Design Pvt. Ltd* மற்றும் *Colombo lotus tower Management Pvt. Ltd* ஆகிய நிறுவனங்களுக்கிடையில் நேற்று கைச்சாத்திடப்பட்ட இந்த 06



**கலைஞர் கருணாநிதியை கரித்து கொட்டுவதை உடன் நிறுத்துங்கள்**
தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி
03



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வுகளில் அவர் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம். படம்: சுதத் மலவீர

கல்கமுவ பகுதியில் கோர விபத்து

## இராணுவ மேஜர் உட்பட மூவர் ஸ்தலத்தில் பலி

**கார் வீதியை விட்டு விலகி மதிலில் மோதி சம்பவம்**



**திறப்பனை தினகரன் நிருபர்**


கல்கமுவ – இஹலகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவ மேஜரொருவர் உட்பட மூவர் பலியாகியுள்ளனர்.

காரொன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மதிலில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

விமர்சனத்துக்கு இடமில்லாத வகையில்

## காலத்துக்கு பொருத்தமான விடயங்கள் கொண்ட 'பட்ஜட்'

**சபையில் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு**




**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் விமர்சனத்துக்குரியதல்ல. மாறாக காலத்திற்கு பொருத்தமான விடயங்கள் பல அதன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## மலையக மக்களின் பிரச்சினைகள் அடுத்த வருடம் ஐ.நா. பேரவையில்

**அறிக்கையாக உள்வாங்கப்படுமென்கிறார் இராதா M.P**



மலையக மக்களின் பிரச்சினைகளை அடுத்த வருடம் ஐக்கிய நாடுகள் பேரவையின் அறிக்கையில் உள்வாங்கவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 06

## ஒருநாள் சேவையின் கீழ் தினமும் 50 லைசென்ஸ்களே

**மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தகவல்**



மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர சாரதி அனுமதிப்பத்திர அலுவலகத்தில் நாளொன்றுக்கு 50 சாரதி அனுமதிப் பத்திரங்கள் மட்டுமே தற்போது வழங்கப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார். 06

## 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கனேடிய தமிழ் பேரவை அரசுக்கு மகஜர்

**ஏற்கனவே முன்வைத்த மகஜருக்கு பதிலின்மையால் மீண்டும் வலியுறுத்து**

கனேடிய தமிழ்ப் பேரவை இலங்கை அரசுக்கு ஏற்கெனவே முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதிலின்மையால் மீண்டும் அந்த கோரிக்கைகளை முன்வைத்துள்ளதுடன் அவை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கனடிய தமிழர் பேரவை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

2022 ஆகஸ்ட் மாதத்தில் கனேடிய தமிழர் பேரவை உட்படப் பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியதைத் தொடர்ந்து காத்திரமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென கனேடிய தமிழர் பேரவை இலங்கை அரசைக் கேட்டிருந்தது.

இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் எதுவும் காணப்படாமையால் இலங்கை அரச தலைவர்கள், அதிகாரிகளுக்கு 06



**தொற்று நோய்கள் மீண்டும் வேகமாக பரவும் அபாயம்**
கட்டுப்பாட்டை கடந்து செல்லும் நிலையில் நாடு
03



**போலி விசாவில் UK செல்ல முயன்ற மூன்று பேர் கைது**
விமான நிலையத்தில் நேற்றுக் காலை சம்பவம்
03

## 'வைக்கிங் மார்ஸ்' சொகுசு கப்பல் இலங்கை வருகை

**900 பயணிகளுடன் நேற்று கொழும்பை வந்தடைந்தது**



படம்: துஷ்மந்த மாயாதுன்ன

அமெரிக்காவின் முதலாவது சொகுசு பயணிகள் கப்பலான 'வைக்கிங் மார்ஸ்' (*Viking Mars* ) நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. நேற்று 900 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கை வந்துள்ள இக் கப்பல் இன்று நாள் முழுவதும் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும். 06

## ஊரகஹ இந்திக்கவின் சகாக்களான இருவர் STF துப்பாக்கி சூட்டில் பலி

**மினுவாங்கொடையில் நேற்று சம்பவம்**

மினுவாங்கொடையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கும் பாதாள உலக கும்பலுக்குமிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் மினுவாங்கொடை பொல்வத்தை, பகுதியில் நேற்று (18) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆகஸ்ட் 24 ஆம் திகதி ஊரகஹ பிரதேசத்தில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்றமை மற்றும் யக்கலமுல்ல பகுதியில் கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி நான்கு வயது 06

ஓமானில் இலங்கை பெண்களின் நிலை;

## தூதரக அதிகாரி ஒருவர் இடைநிறுத்தம் நாட்டுக்கு அழைத்து மேலதிக விசாரணை

சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைப் பெண்கள் அங்கு விற்பனை செய்யப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில், இலங்கைக்கான ஓமானிய தூதரகத்தில் பணியாற்றும் இரண்டாம் நிலை உயரதிகாரி ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் இலங்கைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. சுற்றுலா விசாவை பயன்படுத்தி ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைப் பெண்கள் அங்கு விற்பனை 06

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சர்வதேச செய்திகள்

## போலந்தில் விழுந்த ஏவுகணை குறித்து உக்ரைன் விசாரணை



போலந்தைத் தாக்கிய ஏவுகணை குறித்து புலன்விசாரணை நடத்த உக்ரைனிய நிபுணர்கள் சென்றுள்ளனர்.

போலந்து, நேட்டோ கூட்டணி, மற்ற மேற்கத்திய நாடுகள் ஆகியவை அந்த ஏவுகணை தற்செயலாக உக்ரைனில் இருந்து பாய்ந்ததாக நம்புகின்றன.

ஆனால் உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி அதனை மறுக்கிறார். அது ரஷ்யாவில் இருந்து பாய்ச்சப்பட்டதாக அவர் கூறுகிறார். எனினும் நூறு வீதம் உறுதியாகச் சொல்ல முடியாது என்று அவர் தற்போது தமது நிலையைச் சற்று மாற்றிக்கொண்டார்.

போலந்து ஜனாதிபதி ஆன்றேடூடா தமது நாட்டின் புலனாய்வு முடிவை உக்ரைனிடம் காட்டலாம் ஆனால் சர்வதேச சட்டத்தின்படி நடக்க வேண்டும் என்று கூறினார். ஏவுகணை யாரிடம் இருந்து பாய்ந்தது என்பதில் அமெரிக்கா, போலந்து, உக்ரைன் என்று தரப்புக்கொரு கருத்து இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே உக்ரைனில் பத்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் எரிசக்தி வசதி இல்லாமல் குளிர்காலத்தைச் சந்திக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

## ரஷ்ய தாக்குதல்: உக்ரைனில் 10 மில்லியன் மக்கள் இருளில்



குளிர்காலம் நெருங்கும் நிலையில் உக்ரைன் மின் கட்டமைப்புகள் மீது ரஷ்யா நடத்திய சரமாரித் தாக்குதலில் அங்கு 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மின்சாரம் இன்றி தவிப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் எங்கும் தொடர்ச்சியாக மின் மற்றும் நீர் விநியோகம் தடைப்பட்டு வருகின்றபோதும், போரை முடிவுக்குக் கொண்டுவரும் பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் மறுப்புத் தெரிவிப்பது பற்றி ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

முதல் பனிப்பொழிவு ஆரம்பமாகும் நிலையிலேயே ரஷ்யாவின் அண்மைய சரமாரி ஏவுகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. கடினமான காலத்தை எதிர்நோக்கி இருப்பதாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது. "தற்போது 10 மில்லியனுக்கும் அதிகமான உக்ரைனியர்கள் மின்சாரம் இன்றி உள்ளனர்" என்று செலன்ஸ்கி வியாழக்கிழமை தெரிவித்தார். உக்ரைனில் வழக்கமான நீண்ட குளிர்காலம் ஆரம்பித்துள்ள நிலையில் மில்லியன் கணக்கானோர் தொடர்ச்சியான மின் துண்டிப்பை எதிர்கொண்டிருப்பது மோசமான மனிதாபிமான நெருக்கடியை அதிகரிக்கும் என்று ஐ.நா எச்சரித்துள்ளது.

# மீண்டும் ஏவுகணையை பாய்ச்சியது வடகொரியா

### அமெரிக்காவை தாக்கும் திறன்



அமெரிக்க தலைநிலத்தை தாக்குவதற்குப் போதுமான திறனுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஒன்றை வட கொரியா பாய்ச்சி இருப்பதாக ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று வீசப்பட்ட இந்த ஏவுகணை ஹுகைடோவின் மேற்காக சுமார் 210 கிலோமீற்றர் தூரத்தில் கடலில் விழுந்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனைக்கு அமெரிக்கா கண்டனம் வெளியிட்டிருப்பதோடு வட கொரியாவுக்கு எதிராக வலுவான தடுப்பு நடவடிக்கைக்கு தென் கொரியா உத்தரவிட்டுள்ளது.

பிராந்தியத்தில் அமெரிக்காவின் இருப்பு அதிகரிக்கப்பட்டால் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று வட கொரிய வெளிவிவகார அமைச்சர் சோ சொல் ஹுய் கடந்த வியாழக்கிழமை எச்சரிக்கை விடுத்தார்.

இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்ட அதே தினத்தில் வட கொரியா குறுகிய தூர பலிஸ்டிக் ஏவுகணைகளை வீசி இருந்தது.

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யியோல், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோர் கம்போடியாவில் சந்தித்துப் பேசிய நிலையிலேயே வட கொரியா இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தது.

இந்நிலையில் பைடனுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டதாகவும் கூட்டணி நாடுகளுடன் அமெரிக்கா ஆலோசனை நடத்தும் என்றும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபை பேச்சாளர் நேற்று குறிப்பிட்டிருந்தார்.

வட கொரியா கடந்த இரண்டு மாதங்களில் 50க்கும் அதிகமான ஏவுகணைகளை வீசியதோடு அவைகளில் பெரும்பாலானவை குறுகிய தூரம் கொண்டவையாகும்.

இவ்வாறான நீண்ட தூர ஏவுகணைகள் வீசப்படுவது மிக அரிதாகும். இந்த ஏவுகணைகள் அணு ஆயுதத்தை சுமந்து அமெரிக்க தலைநிலத்தை தாக்கும் திறன் கொண்டிருப்பது அமெரிக்காவுக்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

வட கொரிய தலைநகர் பியொங்யானுக்கு அருகில் இருந்து புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வீசப்பட்டிருப்பதாக தென் கொரிய இராணுவத் தளபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இது 6,100 கிலோமீற்றர் உயரப் பாய்ந்து 1,000 கிலோமீற்றர் தூரத்துக்கு 22 மாக் வேகத்தில் பயணித்தது என்று தென் கொரிய இராணுவம் கூறியது.

## 'ட்விட்டர்' அலுவலகங்கள் அடுத்த வாரம் வரை பூட்டு



உடன் அமுலுக்கு வரும் வகையில் அலுவலகக் கட்டடங்கள் தற்காலிகமாக மூடப்படுவதாக ட்விட்டர் நிறுவனம் அதன் ஊழியர்களுக்கு அறிவித்துள்ளது.

இந்த அலுவலகங்கள் வரும் நவம்பர் 21ஆம் திகதி திறக்கப்படும் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதற்கான காரணம் கூறப்படவில்லை.

ஊழியர்கள் நீண்ட நேரம் தீவிரமாக வேலை செய்ய வேண்டும் இல்லாவிட்டால் வெளியேற வேண்டும் என்று ட்விட்டரின் புதிய உரிமையாளர் இலோன் மஸ்க் ஊழியர்களுக்கு கண்டிப்பான உத்தரவை பிறப்பித்ததை அடுத்து கணிசமான ஊழியர்கள் நிறுவனத்தில் இருந்து விலகி வருவதாக செய்தி வெளியான நிலையிலேயே அலுவலகங்கள் மூடப்படும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மஸ்கின் இந்த கண்டிப்பான உத்தரவை அடுத்து நூற்றுக்கணக்கான ஊழியர்கள் ட்விட்டரை விட்டு வெளியேறிவிடுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

உலகின் பெரும் செல்வந்தரான மஸ்க் கடந்த மாதம் 44 பில்லியன் டொலருக்கு ட்விட்டரை வாங்கியது தொடக்கம் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்விட்டரின் கட்டுப்பாட்டை மஸ்க் எடுப்பதற்கு முன், நிறுவனத்தில் சுமார் 8,000 ஊழியர்கள் இருந்தனர்.

நிறுவனம் ஆயிரக்கணக்கான ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பெயர் வெளியிட விரும்பாத ஒரு முன்னாள் ட்விட்டர் ஊழியர், "இந்தப் பரபரப்பு அடங்கும்போது 2000க்கும் குறைவான ஊழியர்களே எஞ்சியிருப்பார்கள்" என்று தான் கருதுவதாகக் கூறினார்.

தங்கள் குழுவிலிருந்து அனைவரும் பணி நீக்கம் செய்யப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

"அந்தக் குழுவின் முகாமையாளரும் அவரது தலைவரும் பணிநீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் அந்த முகாமையாளரின் முகாமையாளரும் பணிநீக்கம் செய்யப்பட்டார். அதற்கு மேலே உள்ளவர் முதல் நாளில் பணிநீக்கம் செய்யப்பட்ட நிர்வாகிகளில் ஒருவர். எனவே அந்தச் சங்கிலியில் இருந்த ஊழியர்கள் யாரும் இப்போது இல்லை" என்றார்.

## விமானம் வீழ்த்தப்பட்டதற்கு மூவருக்கு ஆயுள் தண்டனை



மலேசியாவின் எம்.எச்17 விமானம் உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் தொடர்பில் நெதர்லாந்து நீதிபதிகள், மூன்று பேரைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்துள்ளனர்.

2014ஆம் ஆண்டில் அந்த விமானம் உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் இருந்த விமானச் சிப்பந்திகள் உட்பட 298 பேரும் கொல்லப்பட்டனர். இவர்களில் 80 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இரண்டு ரஷ்யர்கள், ஓர் உக்ரைனியர் ஆகியோருக்கு நெதர்லாந்து நீதிபதிகள் ஆயுள் தண்டனை விதித்தனர். குற்றம்சாட்டப்பட்ட மூன்றாவது ரஷ்யர் விடுவிக்கப்பட்டார்.

அந்த மூவரும் சம்பவத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை என்றாலும் அவர்கள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தப் பயன்படுத்தப்பட்ட ரஷ்ய ஏவுகணையை உக்ரைனுக்குள் கொண்டுசெல்ல உதவினர்.

அதன் காரணத்தால் அவர்களுக்குக் கடுமையான தீர்ப்பு அளிக்கப்பட்டது. அவர்கள் தற்போது தலைமறைவாய் உள்ளனர்.

அவர்களுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பை உக்ரைன் வரவேற்றுள்ளது. ரஷ்யா அந்தத் தீர்ப்பைக் கடுமையாகச் சாடியது. தனது குடிமக்களை ஒப்படைக்க முடியாது என்று ரஷ்யா கூறியது.

## ஜப்பானிலும் பணவீக்கம் 40 ஆண்டுகளில் உச்சம்



ஜப்பானில் யென் மதிப்பு பலவீனமடைந்துள்ள நிலையில் பொருட்களின் விலை அதிகரித்து அந்த நாட்டில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவு பணவீக்கம் அதிகரித்துள்ளது.

முக்கிய நுகர்வோர் பணவீக்கம், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஒக்டோபரில் 3.6 வீதம் அதிகரித்துள்ளது. 1982 பின் பணவீக்கம் வேகம் கண்டுள்ளது.

எனினும் அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் பொருளாதாரத்துடன் ஒப்பிடுகையில் ஜப்பானின் பணவீக்க விகிதம் குறைவாகும்.

ஜப்பான் நாணயத்தின் பெறுமதி கடந்த ஒக்டோபரில் 32 ஆண்டுகளில் இல்லாத அளவு வீழ்ச்சி கண்டு அமெரிக்க டொலர் ஒன்றுக்கு இணையாக 151 யென் என சரிந்தது. அது தொடக்கம் மீட்சிபெற்ற யென் டொலருக்கு நிகராக 140 யென் ஆக பதிவானது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பால் அதிகரித்திருக்கும் எரிபொருள் விலையை சமாளிப்பது உட்பட பொருளாதார ஊக்கப் பொதிக்கு 260 பில்லியன் டொலர்கள் செலவிடப்படுவது குறித்து ஜப்பான் அரசு கடந்த மாதம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குடியேற்றங்களை அதிகரிக்க இஸ்ரேலிய கூட்டணி திட்டம்



தேர்வு செய்யப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமருக்கும் அவரது தீவிர வலதுசாரி கூட்டணிக்கும் இடையே அடுத்து உருவாக உள்ள அரசில் மேற்கொள்வதற்கு எட்டப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய திட்டங்கள் பற்றிய விபரம் வெளியாகியுள்ளது.

இதில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள பல டஜன் சட்டவிரோத குடியேற்றங்களை சட்டபூர்வமாக்கும் திட்டமும் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திட்டம் கொள்கையாக ஏற்கப்பட்டால், அது பலஸ்தீனர்கள் மற்றும் வெளிநாட்டு கூட்டணிகள் உடன் மோதல் போக்கை ஏற்படுத்தக் கூடும். இந்த யூதக் குடியேற்றங்களை சர்வதேச சமூகம் சட்டவிரோதம் என கருதுவதோடு, வெளிப்புற யூதக் குடியேற்றங்கள் இஸ்ரேலிய சட்டத்திலும் தடை செய்யப்பட்டுள்ளது. பிரதமராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் பென்ஜமின் நெதன்யாகுவின் லிகுட் கட்சி கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், கூட்டணி உடன்படிக்கை முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கையை செயற்படுத்துவதை தடுக்க சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலஸ்தீன வெளியுறவு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.



## காசா அகதி முகாமில் தீ: 21 பேர் உயிரிழப்பு

காசாவின் சனநெரிசல் மிக்க அகதி முகாம் ஒன்றில் உள்ள கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் 10 சிறுவர்கள் உட்பட குறைந்தது 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜபலியா அகதி முகாமில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமையலறையில் ஏற்பட்ட எரிவாயு கசிவே இந்த விபத்துக்குக் காரணம் என்று ஆரம்பக்கட்ட விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜபலியா காசாவில் உள்ள எட்டு அகதி முகாம்களில் ஒன்றாகும். இந்தத் தீ விபத்தில் ஒட்டுமொத்த கட்டடமும் கருகியுள்ளது சமூக ஊடகத்தில் வெளியான படங்கள் காட்டுகின்றன.

தீ ஏற்பட்டபோது மக்கள் கூச்சலிட்டுக்கொண்டு வெளியே ஓடுவதும், உறவினர்கள் வீதியில் நின்று பிரார்த்திப்பதும் தெரிகிறது. 2.3 மில்லியன் மக்கள் வசிக்கும் காசா பகுதி உலகில் அதிக சன நெரிசல் மிக்க பகுதிகளில் ஒன்றாகும். இங்கு உள்ள எட்டு அகதி முகாம்களிலும் சுமார் 600,000 அகதிகள் வாழ்வதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 நவம்பர் 19 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN

| தொழுகை நேரம் | |
|---|---|
| 16 முதல் 21 வரை | |
| சுபஹ் | 04.42 |
| லுஹர் | 11.57 |
| அஸர் | 03.19 |
| மஃரிப் | 05.50 |
| இஷா | 07.03 |

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் கார்த்திகை 3

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



## 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு

# நாட்டின் பெருமையை பறைசாற்றும் மாபெரும் ஓவிய போட்டி நடத்தப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் பெருமையை பறைசாற்றும் வகையில் மாபெரும் ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் திறமையான கலைஞர்கள் அனைவரையும் இதில் இணைத்துக் கொள்ள உள்ளதாகவும், புதிய கலைஞர்களுக்கு தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். கொழும்பு லயனல் வென்ட் கலையரங்கில் (17) பிற்பகல் நடைபெற்ற சித்திரக் கலைஞர் எச். எஸ் சரத்தின் 50 ஆவது தனிப்பட்ட ஓவியக் கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி கண்காட்சியை பார்வையிடும் சந்தர்ப்பத்தில், கண்காட்சியை பார்வையிட வந்த இரு பாடசாலை மாணவிகளால், இந்நாட்டின் கல்வி முறையை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்து தொகுக்கப்பட்ட திட்டமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

06

## ஓமானில் சுமார் 90 இலங்கை பெண்கள் நிர்க்கதி நிலையில்

### மஸ்கட்டிலுள்ள தூதரகத்தில் அதிகளவானோர் முறைப்பாடு

இலங்கையைச் சேர்ந்த சுமார் 90 பெண்கள் ஓமானில் நிர்க்கதியாகியுள்ளதாக மஸ்கட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மஸ்கட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு செல்லும், இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணியாளர்களிடமிருந்து நாளாந்தம் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் வருகை அல்லது சுற்றுலா வீசாவைப் பெற்று தொழில் வீசாக்களாக மாற்றும் நோக்கத்தில் ஓமானுக்கு சென்றுள்ளவர்களென தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் பலர் பதிவு செய்யப்படாத முகவர்களால் ஆட் கடத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உட்பட்டு பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போது, சுமார் 90 இலங்கைப் பெண்கள் ஓமானிலிருந்து நா டு திரும்புவதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். நாடு திரு ம்புவதற்கான வீசா,விமான அனுமதிச்சீட்டு, முகவர் கட்டணம், மற்றும் அந்தந்த அனுசரணையாளர்கள் கோரும் ஆட்சேர்ப்பு செலவு போன்ற செலவுகளை அவர்களால் தாங்க முடியவில்லையென்று மஸ்கட்டில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட இந்த பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர், அதற்கான செலவுகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஏற்றுள்ளது. இந்த பெண் தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி உள்ளிட்ட நலன்புரி வசதிகளை தூதரகம் வழங்குகிறது. முன்னதாக இந்த ஆண்டில், 240க்கும் மேற்பட்ட பெண்களை நாடு திரும்புவதற்கு தாம் உதவியுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

### பொருளாதார நெருக்கடிக்கு யார் காரணம்?

# ஆய்வு செய்வதை விடுத்து நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்திப்பதே அவசியம்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடிக்கு யார் காரணம் என்பது தொடர்பில் பரிசோதனை நடத்துவதை விடுத்து நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில்

06



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு வீரகெட்டிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சமய நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் பாரியார் சிரந்தி ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்கள், எம்.பி மார்கள், முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்த போது,...

## பொருளாதார ஸ்திரத்தன்மையுடனான சட்டங்கள் தொடர்பில் மறுசீரமைப்பு

### பிரேரணைகள் டிசம்பர் இறுதியில் முன்வைப்பு



நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் தொடர்புடைய சட்ட மறுசீரமைப்பு சம்பந்தமான பிரேரணைகளை எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நாட்டுக்கு முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாக பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய சபை உபகுழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். நாட்டின் பொருளாதார

06

## கலைஞர் கருணாநிதியை கரித்து கொட்டுவதை உடன் நிறுத்துங்கள்



கலைஞர் கருணாநிதியை கரித்து கொட்டுவதை நிறுத்துங்கள் என கொழும்பு மாவட்ட எம்.பி, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களின் எல்லா இழப்புகளுக்கும், தமிழக அரசியல்வாதிகளையும், இந்திய தலைவர்களையும் காரணமாக காட்டுவதை நிறுத்துங்கள். இலங்கையில் தமிழர்கள் கண்டு விட்ட இழப்புகளுக்கு முதற்காரணம், இலங்கை தமிழ் அரசியல் மேதைகள். இரண்டாவது காரணம், கொலைகார பேரினவாத அரசுகள் என்றார்.

தமிழக இலங்கை அரசியல் பிரமுகர் மறைந்த மணவை தம்பியின் மைந்தர் மணவை அசோகனின் பவள விழா நிகழ்வு மட்டக்குளியில் நடைபெற்ற போது, அதில் அதிதியாக கலந்துக்கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், தமதுரையின் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிட்ட அவர்,.

1940களில் கண்டிய சிங்கள தலைமைகளே தர முன் வந்த சமஷ்டியை எட்டி உதைத்தது யார்? 65:35 என்ற ஜனபரம்பலுக்கு, நியாயமேயற்ற 50:50 என்ற யதார்த்தமற்ற கோரிக்கையை முன் வைத்து, பிரிட்டிஷ் அரசாங்கமே கைவிரிக்கும் நிலைமையை ஏற்படுத்தியது யார்? 1987ல் வடக்கு கிழக்கு மாநிலம் என்ற அடிப்படையை துவக்கி வைத்த, இந்திய இலங்கை

06

## தொற்று நோய்கள் மீண்டும் வேகமாக பரவும் அபாயம்

### கட்டுப்பாட்டை கடந்து செல்லும் நிலையில் நாடு



நாட்டில் கட்டுப்படுத்தப்பட்ட பல தொற்று நோய்கள் மீண்டும் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் நோய் தொற்று தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் சுகாதார அமைச்சின் பிரதி பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ஹெரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

குறிப்பாக நாட்டில் பரவலாக காணப்பட்ட பல தொற்று நோய்களை நாம் ஒழித்துள்ளோம். எம்மால் மலேரியா, அம்மை நோய்கள் மற்றும் தொழு நோய்கள் போன்றவை கட்டுப்படுத்தப்பட்டன. இருப்பினும் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் தற்போது

06

## போலி வீசாவில் UK செல்ல முயன்ற மூன்று பேர் கைது

### விமான நிலையத்தில் நேற்றுக் காலை சம்பவம்

போலி விசாவைப் பயன்படுத்தி பிரிட்டன் செல்ல முயன்ற மூன்று இலங்கையர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று இலங்கையரும் லண்டன் செல்லும் விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் தங்களுடைய குடியகல்வு நடைமுறைகளை சரி செய்வதற்காக விமான நிலையத்திலுள்ள குடியகல்வு பிரிவுக்கு சென்றனர். இதன்போது கடமையிலிருந்த குடியகல்வு அதிகாரிகள், அவர்களது பயண ஆவணங்களை ஆய்வு செய்த போது, விசாக்களின் துல்லியம் குறித்து சந்தேகமடைந்து, பின்னர் அவை போலியானதென கண்டறிந்தனர். இதனையடுத்து, யாழ்ப்பாணம், மல்லாவி மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் வசிக்கும் 23 மற்றும் 31 வயதுடையவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## வெளிநாட்டு சேவைக்கு ஆட்சேர்ப்பு 40 பேர் ஜூலை மாதம் உள்ளீர்ப்பு

### வெளிவிவகார அமைச்சுசார் ஆலோசனைக் குழு



நாட்டு சேவைக்கு நாற்பது பேர் கொண்ட குழுவை ஜூலை முதல் ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்த்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாமையால் வெளிநாட்டு சேவைத் துறையில் குறைபாடுகள் காணப்படுகின்றமை வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரிய வந்தது. இந்த நிலையில் வெளி

வெளிவிவகார அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அண்மையில் அதன் தலைவர் அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நடைபெற்றது. இதன்போது வெளிநாட்டு சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளவர்களின்

06

### இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி;

## உலக வங்கி பிரதிநிதிகளுடன் நிதி அமைச்சில் கலந்துரையாடல்



இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக உலக வங்கி பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஆகியோரின் தலைமையில் (17) நிதியமைச்சில் நடைபெற்றது. உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் ஹடட் ஸ்வோஸ் (FarisHadadZervos)

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.31 | 242.45 |
| கனடியன் டொலர் | 265.08 | 277.22 |
| யூரோ | 358.78 | 373.86 |
| ஜப்பான் யென் | 2.4417 | 2.5454 |
| சிங்கப்பூர் டொலர் | 255.60 | 266.39 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 412.93 | 429.30 |
| சுவிஸ் பிராங்க் | 360.91 | 378.36 |
| அமெரிக்க டொலர் | 360.88 | 371.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 964.12 | கட்டார் ரியால் | 99.42 |
| குவைத் டினார் | 1,174.43 | சவூதி ரியால் | 96.73 |
| ஓமான் ரியால் | 944.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.96 |

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

கையிலிருந்த வேலினை யானையின் மீது வீசி விட்டதால் களத்தில் போரினைத் தொடர வேறு வேல் தேடுகிற வீரன், தன் மார்பின்மீதே ஒரு வேல் பாய்ந்திருப்பது கண்டு மகிழ்ந்து அதனைப் பறித்துப் பகையை எதிர்த்திடுகின்றான்.

## போதைப்பொருள் ஒழிப்புக்காக அனைவரும் பங்களிக்க வேண்டும்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன. 'ஐஸ்' என்ற போதைப்பொருள் பழக்கத்தை பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் போதைவஸ்து வியாபாரிகள் தீவிரம் காட்டி வருவதாக நாடெங்குமிருந்து தகவல்கள் வருகின்றன. இந்த நிலைமையானது மிகவும் ஆபத்தானதாகும். எமது எதிர்கால சந்ததியினரை இருளுக்குள் தள்ளுகின்ற இம்முயற்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் இதன் பாதிப்பு மிக மோசமானதாகவே இருக்கும்.

இலங்கையில் போதைவஸ்துப் பாவனையாளர்களால் ஐஸ் என்ற போதைப்பொருளே தற்போது அதிகளவில் பயன்படுத்தப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன. இப்போதைப்பொருளே வெளிநாடுகளில் இருந்து தற்போது அதிகளவில் இலங்கைக்குக் கடத்தி வரப்படுவதாகத் தெரியவருகின்றது. ஐஸ் போதைப்பொருள் பாவனையே பாடசாலை மாணவர்கள் பலரிடம் காணப்படுவதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன.

பாடசாலை மாணவர்களில் ஆண்கள் பலரிடம் மாத்திரமன்றி பெண்களிடமும் இப்பழக்கம் படிப்படியாக அதிகரித்து வருவதாக சில தினங்களுக்கு முன்னர் செய்தியொன்று வெளியாகியிருந்தது. பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரிகள் பணமீட்டுவதற்கு முயற்சிப்பதை அறிய முடிகின்றது. இளவயதினரை போதைப்பொருளுக்கு அடிமையாக்குவது இலகுவானதென்று போதைப்பொருள் வியாபாரிகள் கருதுவதாகத் தெரிகின்றது. எனவேதான் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருளை விற்பனை செய்வதில் போதைப்பொருள் வியாபாரிகள் தற்போது கவனம் செலுத்தி வருகின்றனர்.

போதைப்பொருள் ஆபத்தில் இருந்து எமது எதிர்கால சமுதாயத்தைக் காப்பாற்றுவதில் அனைத்துத் தரப்பினரும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். போதைப்பொருள் ஆபத்து குறித்து சமூகமட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. மாணவர்களிடம் மாத்திரமன்றி, பெற்றோர் மற்றும் சமூகநலன்விரும்பிகள் மத்தியில் இதுபற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசரத் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

அதேசமயம் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதில் பாடசாலை சமூகத்துக்கும், பெற்றோருக்கும் பாரிய பங்கு காணப்படுகின்றது. மாணவர்களை வீட்டுச் சூழலில் பெற்றோரும், பாடசாலைச் சூழலில் ஆசிரியர்களும் கண்காணிப்பது மிகவும் அவசியம். மாணவர்களின் அன்றாட நடத்தையில் மாற்றமெதுவும் தென்படுகின்றதா என்பதை அவதானிக்க வேண்டும். அவ்வாறு மாற்றமெதுவும் தென்படுமானால் அது குறித்து உரிய தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் பொறுப்பாகும்.

மாணவர் ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளாரெனத் தெரியவந்ததும் அதனை ஆசிரியர்கள் அலட்சியப்படுத்துதல் கூடாது. அம்மாணவரை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுத்து நல்வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் அதிபரும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும். இதனை ஒரு சமூகக்கடமையாக ஆசிரியர்களும் அதிபரும் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு போதைப்பொருள் ஒழிப்புப் பணியில் அனைத்துத் தரப்பினரும் தம்மால் முடிந்தளவு அர்ப்பணிப்புடன் பணியாற்றினாலேயே எமது நாட்டில் போதைப்பொருள் அரக்கனை முடிவுக்குக் கொண்டு வர முடியும். அப்போதுதான் எமது நாட்டின் எதிர்கால சந்ததியினர் சுபிட்சமாக வாழ்வதற்கு வழியேற்படும்.

பெற்றோருக்கே இந்த விடயத்தில் பாரிய பொறுப்பு உள்ளதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் தங்களது அதிகமான நேரத்தை வீட்டிலேயே கழிக்கின்றனர். பிள்ளைகள் நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டிய முதலாவது பாடசாலை அவர்களது இல்லம் ஆகும். பிள்ளைகளுக்கு நல்வழி காட்ட வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்கே உள்ளது. பெற்றோர் எவ்வாறு அறிவுரை புகட்டுகின்றார்களோ அந்த அறிவுரைக்கேற்பவே அப்பிள்ளை வளர்ந்து வருமென்பதை மறந்து விடலாகாது.

தமது பிள்ளைகளின் நட்பு வட்டம் குறித்து பெற்றோர் மிகுந்த அவதானமாக இருப்பது முக்கியம். தீயநடத்தைகள் கொண்ட நண்பர்களுடன் தமது பிள்ளைகள் நட்பு வைத்துள்ளனரா என்பது குறித்த அவதானம் பெற்றோர் மத்தியில் எப்போதும் இருக்க வேண்டும்.பிள்ளைகளின் மாறுபாடான நடத்தைக் கோலம் ஆரம்பத்திலேயே அவதானிக்கப்படுமானால் போதைப்பொருள் பாவனையை ஆரம்பத்திலேயே கண்டறிந்து விடலாம். அப்பிள்ளையை போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடச் செய்வதும் இலகுவாயிருக்கும்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரை இலக்கு வைத்து அவர்களை தீயவழியில் இட்டுச் செல்வதற்கு முற்படுகின்ற குற்றவாளிகள் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டியது சமூகநலனில் அக்கறையுள்ள அனைவரினதும் கடமையாகும். போதைப்பொருள் குற்றவாளிகள் தொடர்பில் பொது மக்கள் வழங்குகின்ற தகவல்கள் ஒவ்வொன்றும் போதைப்பொருள் குற்றங்களை ஒழிப்பதில் பொலிசாருக்கு உதவியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

editor.tkn@lakehouse.lk

# அம்பாறை மாவட்ட மக்களை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கான நிரந்தரத் திட்டம் வேண்டும்!

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லை தற்காலத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. யானை நடமாட்டமுள்ள பிரதேச மக்கள் உயிராபத்தை எதிர்கொண்டவர்களாகவும், வாழ்வாதாரத்தை பறிகொடுத்தவர்களாகவும் தினசரி வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

காடுகளை அண்மித்த எல்லைக் கிராம மக்கள், விவசாயக் கிராமங்களில் வசிக்கும் ஏழைகள், விவசாயம் செய்கை பண்ணப்படும் காணிகளுக்கு தினசரி போக்குவரத்துச் செய்யும் விவசாயிகள் என பல்வேறு தரப்பினர் காட்டு யானைகளின் தாக்குதல், அச்சம், அபாயம், அச்சுறுத்தல் என்பனவற்றுக்கு முகங்கொடுத்த வண்ணம் தங்களது தினசரி நாட்களைக் கழித்து வருகின்றனர்.

அதிகரித்து வரும் காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, ஏழை மக்களையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதற்கான நிரந்தரத் திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் அவசர கவனம் செலுத்த வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. காட்டு யானைகளின் தாக்குதல்களில் மாவட்ட மட்டத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. பலரின் சொத்துக்கள், உடைமைகளுக்கு சேதமேற்பட்டுள்ளது.

மாணவர்கள் சீரான கல்வி பெற முடியாது சிரங்களை எதிர் கொள்கின்றனர். அன்றாட வருமானத்தை இழந்து வாழ வழியின்றி நிர்க்கதிக்குள்ளானவர்கள் பலருள்ளனர். உலகளாவிய ரீதியில் மிக அதிகமான யானை – மனித மோதல் சம்பவங்கள் இலங்கையிலயே அதிகம் இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் மொத்தம் 5800 யானைகள் உள்ளதாகவும், அவற்றில் வருடாந்தம் 400 யானைகள் வரை இறப்பதாகவும், சுமார் 100 பொதுமக்கள் உயிரிழப்பதாகும் மேலும் கண்டறியப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அதிகமான பிரதேசங்களில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் இரவு, பகல் வேளைகளில் அதிகரித்துள்ள யானைகளின் நடமாட்டத்தினால் நகர்வாழ் மக்களும் அச்சத்தை எதிர்கொண்டுள்ளனர். பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யானைகள் விவசாயிகள் மற்றும் குடியிருப்பாளர்களைத் தாக்குவதுடன் மாத்திரம் நின்றுவிடாது, நெற்காணிகள், மேட்டுநிலப் பயிர்கள் என்பனவற்றை அதிகம் துவம்சம் செய்தும் வருகின்றன. அத்துடன் தங்களது உடைமைகளுக்கு அதிகம் சேதம் விளைவித்து வருவதாகவும் மக்கள்; குறிப்பிடுகின்றனர். நெல் அறுவடையைத் தொடர்ந்து, நெற்காணிப் பிரதேசங்களுக்குள்; உட்புகும் யானை அல்லது யானைக் கூட்டங்களிடமிருந்து தங்களது விவசாய உற்பத்திகளைப் பாதுகாப்பதில் அம்பாறை மாவட்ட எல்லைக் கிராம விவசாயிகள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கான நிரந்தர பாதுகாப்புத் திட்டங்களை அவர்கள் எதிர்பார்த்தவர்களாகவும் உள்ளனர்.

கடந்த சிறுபோக நெற்செய்கையாளர்கள் காட்டு யானைகளிடமிருந்து தங்களது நெற்காணிகளைப் பாதுகாத்துக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். விளைந்து அறுவடைக்குத் தயார் நிலையிலிருந்த நெற்காணிகளை கடந்த போகங்களிலும், காட்டு யானைகள் துவம்சம் செய்து நஷ்டமேற்படுத்தியமையும் தெரிந்ததே.





யானைகளிடமிருந்து நெற்காணிகளைப் பாதுகாக்கும் பணியில் பிரதேச ரீதியாக தனியார் கூலிக்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுபவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், இதர பொருட்களை விவசாயிகள் தங்களது சொந்தச் செலவில் வழங்கி வருவதுடன், பணியாட்களுக்கான கூலியாக அறுவடையின் போது, நெல் வழங்கப்பட்டும் வருகின்றது. யானை பாதுகாப்புப் பணிக்காக விவசாயிகள் இவ்வாறு ஒவ்வொரு போகமும் மேலதிக செலவை எதிர்கொண்டு வருகின்றனர்.

நெற்காணிகள் துவம்சத்திற்கு மேலதிகமாக, பாடசாலைகள், அரச, தனியார் கட்டடங்கள், இயந்திராதிகள் என்பனவும் அண்மைக் காலத்தில் அதிகம் சேதமாக்கப்பட்டுள்ளன. அட்டாளைச்சேனை கமநலப் பிரிவிலுள்ள நெற்காணி விதைப்புப் பணிக்காக அதிகாலையில் விதைநெல் ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டியை அட்டாளைச்சேனை – ஆலம்குளம் வீதியிலுள்ள சம்புக்களப்புப் பிரதேசத்தில் வழிமறித்த யானை, நெல் மூடைகளை உண்டதுடன், முச்சக்கரவண்டிக்கும் சேதம் விளைவித்துள்ளது.

இரவு, பகல் வேளைகளில் தொல்லை கொடுத்து வரும் காட்டு யானைகளிடமிருந்து மக்களையும், அவர்களது தொழில் முயற்சிகள் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்குமாறு முன்வைக்கப்படும் தொடர் கோரிக்கைகள் இதுவரை பலனளிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

காட்டு யானைகள் நடமாட்டமுள்ள பிரதேசங்களில், மின்சார பாதுகாப்பு வேலிகளை அமைத்து, அவஸ்தையுறும் மக்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பளிக்கும் பணியை அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவு செய்ய வேண்டும். அதுவே பொதுமக்களினதும், விவசாயிகளினதும் தற்கால எதிர்பார்ப்பாக உள்ளது.





**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

# மாகாண மட்ட சதுரங்க போட்டியில் ஆயிஷா அயானா முதலிடம்



மருதமுனை அல்ஹம்றா வித்தியாலய மாணவி முகம்மது சமீம் ஆயிஷா அயானா மாகாண மட்ட தனிநபர் சதுரங்க போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகி தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது மழ்கறுல் ஷம்ஸ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்டப்போட்டியிலேயே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கான விருது மற்றும் சான்றிதழ் என்பவற்றை பாடசாலை அதிபர் ஐ.உபைதுல்லா அண்மையில்(081121022) வழங்கி வைத்தார். கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் காட்டி வரும் இம்மாணவி மருதமுனையைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் ஏ.டபிள்யு.முகம்மது சமீம், மெஸ்பானி தம்பதியின் புதல்வியாவார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# சர்வோதய உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்து பண்டாரகமவில் அவின்யாவின் முதலாவது பாடசாலை

இலங்கையை தளமாகக் கொண்ட, இலாப நோக்கற்ற ஒரு அமைப்பான அவின்யா அறக்கட்டளை, பொருளாதாரரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு, அங்கீகரிக்கப்பட்ட, பாரம்பரியமற்ற மற்றும் கட்டுபடியாகும் வகையில் தொழிற்பயிற்சிக் கற்கைநெறிகளை வழங்குவதற்கான நீண்ட கால மூலோபாயத்தின் ஒரு அங்கமாக, ஜனவரி மாதத்தில் தனது முதலாவது பாடசாலையை திறந்து வைக்கவுள்ளது.

பண்டாரகம அவின்யா அக்கடமி, சர்வோதயவுடன் இணைந்து, விசேட துறைகளில் ஒரு மாற்று தொழில் வாழ்வை முன்னெடுக்க விரும்புகின்ற மாணவர்களுக்கு உதவுவதற்காக, உயர்தர தொழில்நுட்ப, சமூக மற்றும் மென் திறன்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பாடசாலைகளின் வலையமைப்பில் முதலாவது பாடசாலையாக உருவாகவுள்ளது.

“எங்கள் நோக்கம், மாணவர்கள் தேர்ந்தெடுத்த தொழிற்பயிற்சித் துறைகளில் அனைத்து வகையான அனுபவங்கள் மற்றும் வழிகாட்டல்கள் மூலம் அவர்களுக்கு உதவுவதாகும். இது அவர்கள் தொழில்தருநர் சந்தையில் திறம்பட போட்டியிடவும், மதிப்புமிக்க தொழில்ரீதியான எதிர்காலத்தை உறுதிப்படுத்தவும் உதவும். சாதாரண தரப் பரீட்சைக்கு பின்னரான மாணவர்களுக்கு உயர்தர கற்றலுக்கு மாற்றான பாதையை நாங்கள் வழங்குவோம். இது அவர்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவுடன் நேரடியாக வேலைவாய்ப்பிற்கு இட்டுச்செல்லவோ அல்லது மேலதிகக் கற்கையை தொடரவோ வாய்ப்பளிக்கும்,” என்று அவின்யா அறக்கட்டளையின் ஸ்தாபகரும், பணிப்பாளர் சபைத் தலைவருமான கலாநிதி சஞ்சீவ வீரவரண அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டாண்மை மற்றும் அவின்யாவின் பாடத்திட்டம் மற்றும் கற்றல் முறைமை குறித்து கருத்து தெரிவித்த சர்வோதய உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமான கலாநிதி வின்யா ஆரியரத்ன, “முழுமையான திறன்களைக் கொண்ட தனிநபர்களாக மாற்றியமைக்கும்" நோக்கத்துடன் இந்த கற்கைநெறி நிகழ்ச்சி மாணவர்களுக்கு சிறந்த கற்றல் அனுபவத்தை வழங்கும் என்று குறிப்பிட்டார்.

\மூன்றாண்டு கற்கைநெறியை அவின்யாவின் கல்வி மற்றும் தொழில்துறை வல்லுநர்கள் அணி நடத்தும். இது 6 மாத கால அவின்யா வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்துடன் (Empower Program) ஆரம்பிக்கும், அதைத் தொடர்ந்து , மாணவர்களை வேலைவாய்ப்புக்கு தயார் செய்யும் நோக்குடன், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் தொழில்முறை திறன்களை உள்ளடக்கிய ஒரு விரிவான பாடத்திட்டம் முன்னெடுக்கப்படும். வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் போது மாணவர்கள் ஆங்கிலம், பயனுள்ள தொடர்பாடல் திறன்கள், டிஜிட்டல் அறிவு, பகுப்பாய்வு பகுத்தறிவு, ஆக்கபூர்வமான சிந்தனை, தலைமைத்துவ திறன்கள், தொழில் முயற்சியாண்மை முயற்சி மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் பிற திறன்களைக் கற்றுக் கொள்வார்கள்.

இது செயற்திட்ட அடிப்படையிலான கற்றல் அணுகுமுறையின் கீழ் இன்றைய சந்தையில் நபர் ஒருவர் போட்டித்திறனைக் கொண்டிருப்பதற்கு மிகவும் இன்றியமையாதது. இந்த அறக்கட்டளை கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளகப் பயிற்சி மற்றும் தொழில் பழகுவதற்கான வாய்ப்புக்களுக்கும் அனுசரணையளிக்கிறது. அத்துடன் அனைத்து பட்டதாரிகளும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதிலும் உதவுகிறது. கற்கைநெறியின் போது, அனைத்து மாணவர்களும் பல்வேறு பாத்திரங்களில் வளாகத்தில் பணிபுரிய வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன், மேலும் அந்த வேலைக்காக அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படும்.

கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, கலாநிதி தாரா டி மெல், அனார்கலி முனசிங்க, அஷ்ரஃப் ஒமார், கலாநிதி சஞ்சீவ வீரவரண மற்றும் கஸ்தூரி செல்லராஜா வில்சன் ஆகியோர் இந்த அறக்கட்டளையின் உறுப்பினர்களாக செயற்படுகின்றனர்.

# தேசிய மட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற சம்மாந்துறை மத்திய கல்லூரி மாணவி

அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டி 2022 இல் தேசிய மட்டப் பிரிவு5 ஆம் பிரிவு இலக்கிய விமர்சனப் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலய (தேசிய பாடசாலை)12 ஆம் தரம் கலைப்பிரிவு மாணவி அஷ்ரப் பாத்திமா ஸகீய்யா பானு மூன்றாம் இடத்தினைப் பிடித்து வென்கலப் பதக்கத்தினை பெற்றுள்ளார்.

கல்வி அமைச்சின் தமிழ்மொழி அலகினால் கடந்த 05, 06ஆம் திகதிகளில் அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. பல்வேறு போட்டியாளர் கலந்து கொண்ட இப்போட்டிகளில் இம்மாணவி இலக்கிய விமர்சனப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை பெற்று கிழக்கு மாகாணத்திற்கும், சம்மாந்துறை கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இம்மாணவியை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பதில் அதிபர் திருமதி யூ.என்.ஏ. றஹீம் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இம்மாணவிக்கு பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.





இம்மாணவி பதக்கம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ்,நினைவுச்சின்னம், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இம்மாணவி சம்மாந்துறைச் சேர்ந்த உதுமா லெவ்வை அஷ்ரப், அலியார் ஜுமானா தம்பதியின் மூத்த புதல்வியாவார்.

**எம்.சி.அன்சார்...**
*(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)*

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# ஒரு நாள் ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் நிலையத்திற்கு உதவி



**'ஒருநாள் ஒரு வேலைத் திட்டம் ' என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு கல்லடி 'உதயம்' விழிப்புலனற்றோர் நிலையத்திற்கு உதவி வழங்கப்பட்டது. கிழக்கின் சமூக செயற்பாட்டாளரும், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆரம்பித்துள்ள இத்திட்டத்தின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அவருடன் சமூக செயற்பாட்டாளரான வி.ரி.சகாதேவராஜாவும் சமுகமளித்திருந்தார்.**

புலம்பெயர் தேசத்தில் வசிக்கின்ற தாயகப்பற்றுள்ள பரோபகாரிகளின் உதவியோடு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

உதயம் நிலையத் தலைவர் விமல் முன்னிலையில் அவர்களுக்கு நிதிஉதவி வழங்கப்பட்டதோடு விருந்துபசாரமும் இடம்பெற்றது.

ஒளிவிழாவின் போது உலர்உணவு வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும் என்று உதயம் விழிப்புலனற்றோர் சங்க தலைவர் விமல் கேட்டுக் கொண்டதற்கு தவிசாளர் இணங்கினார்.

எதிர்வரும் மார்கழி மாதத்தில் அந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதேவேளை 'ஒருநாள் ஒரு வேலைத் திட்டம்' என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெரியநீலாவணை சுனாமி தொடர்மாடி வீட்டுத் தொகுதியிலுள்ள மாற்றுத்திறனாளி குடும்பத்திற்கும் உதவி வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளி அஜய் மற்றும் அவரது தாயாரான பெண் தலைமை தாங்கும் குடும்பத் தலைவி திருமதி செல்வராஜா அபிதா குடும்பத்திற்கு அரிசி, மா, பருப்பு, சீனி, தேயிலை, பிஸ்கட், பால்மா கடலைப்பருப்பு உள்ளிட்ட பல உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.





தமக்கு முடியுமானால் வாழ்வாதார உதவி செய்யுமாறு குடும்பத்தலைவி அபிதா வேண்டுகோள் விடுத்திருந்தார். இக்கோரிக்கைக்கு விரைவில் தீர்வு தரப்படும் என சமூக சேவையாளர் ஜெயசிறில் உறுதியளித்தார்.

(காரைதீவு குறூப் நிருபர்)

# இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பதில் சீனா இழுத்தடிப்பு!



**உலகில் பல நாடுகளை சீனா தனது கடன் பொறியில் சிக்க வைத்துள்ளதென்பது உலகறிந்த விடயம். சீனா பல நாடுகளுக்கு நேரடிக் கடன்களை வழங்கி வருகின்றது. அதேவேளை முதலீடுகளையும் கடன் அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றது. இலங்கைக்கு சீனா இதுவரை வழங்கியுள்ள கடன் தொகை ஒருபுறமிருக்க, பாரிய முதலீடுகளையும் இலங்கையில் பெருமளவில் மேற்கொண்டுள்ளது. அவையெல்லாம் சீனாவின் தந்திரோபாய செயற்பாடுகள் என்பதில் ஐயமில்லை.**

இலங்கையில் உருவெடுத்த பொருளாதார நெருக்கடி காரணமாக நாடு பாரிய பின்னடைவுகளை சந்தித்துள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமானால் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் வெளிநாடுகளில் இருந்து கடந்த காலத்தில் இலங்கை பெற்றுக் கொண்ட கடன் தொகை மிகவும் அதிகம். அதுவும் சீனாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட கடன் தொகை மிகவும் அதிகமாகும்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி விவகாரத்தில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அதிகம் பேசப்பட்டு வருகின்றது. இலங்கை அரசாங்கமும் கடன் மறுசீரமைப்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. அதாவது பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதாயின் கடந்த காலத்தில் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மறுசீரமைக்க வேண்டியது அவசியமென பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதுவும் சீனாவிடமிருந்து இதுவரை பெற்றுக் கொண்ட பெருந்தொகை கடனை மறுசீரமைக்க வேண்டுமென்பது முக்கிய விடயமாகும்.

சீனா வழங்குகின்ற கடன் ஏனைய நாடுகள் வழங்குகின்ற கடன் போன்றதல்ல. சீனாவின் கடன் அதிக வட்டி கொண்டது. அவ்வாறான அதிக வட்டி அடிப்படையில் பெருந்தொகைக் கடனை இலங்கை போன்ற நாடுகள் மீளச்செலுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. அதுவும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையைப் பொறுத்தவரை பாரிய தொகைக் கடனை சீனாவுக்கு மீளச்செலுத்துவதென்பது மிகவும் கடினமானதாகும்.

கடந்த காலத்தில் கடனைப் பெற்றுக் கொண்ட பல நாடுகளிடம், இலங்கை தனது கடனை மறுசீரமைக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றது. இக்கோரிக்கையானது சீனாவிடம் விசேடமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை கடந்த காலத்தில் வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களில் பெருமளவிலான தொகையை சீனாவிடமிருந்தே பெற்றுக் கொண்டுள்ளதால், சீனாவின் கடன் பற்றியே அதிக அளவில் பேசப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக சீன நிதி அமைச்சருடன் சமீபத்தில் இலங்கை கலந்துரையாடல்களை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இலங்கைக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைப்பதில் சீனா தொடர்ந்தும் இழுத்தடிப்புப் போக்கையே கடைப்பிடித்து வருவதாக இலங்கையிலுள்ள பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கு கடந்த காலத்தில் கடன் உதவிகளை வழங்கிய நாடுகளில் பிரதான நாடுகளாக மூன்று நாடுகள் உள்ளன. , சீனா, இந்தியா, ஜப்பான் ஆகியவையே அந்த மூன்று நாடுகளுமாகும். அந்நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அக்கறையுடன் செயற்படுகின்ற போதிலும், சீனா இந்த விடயத்தில் இழுத்தடித்து வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன.

சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளுடன் இலங்கை தரப்பினர் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு விரைவான தீர்வு காண்பதாயின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தை புறந்தள்ளிவிட முடியாதென்பதே இலங்கை மற்றும் சர்வதேச பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருந்து வருகின்ற நிலையில், இந்த விடயத்தில் சீனா எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றது என்பதே இங்கு முக்கியமானதாகும்.

இலங்கை பெற்றுக்கொண்டுள்ள கடன் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச நாடுகள் பலவும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக உள்ள போதிலும், கடனை மறுசீரமைப்பதில் சீனா அக்கறை செலுத்தாமல் இழுத்தடிப்பதே இங்கு சிக்கலுக்குரியதாக உள்ளதென நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் பங்களாதேஷிடமும் இலங்கை கடன் பெற்றுக் கொண்டுள்ளது. எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை உரிய நேரத்தில் இலங்கை செலுத்துமென்று பங்களாதேஷ் எதிர்பார்த்துள்ளது. இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பங்களாதேஷினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இலங்கை ஏற்கனவே மீளச்செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையினால் உரிய நேரத்தில் அதனைச் செலுத்த முடியவில்லை. இந்த நிலையில், குறித்த கடனை செலுத்தும் காலஎல்லையை நீடிப்பதற்கு பங்களாதேஷ் இணக்கம் வெளியிட்டிருந்தது. ஆனால் சீனாவிடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்டுள்ள கடன் தொகையுடன் ஒப்பிடுகையில் பங்களாதேஷிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ள கடனின் தொகை சிறியதாகும்.



**இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அக்கறையுடன் செயற்படுகின்ற போதிலும், சீனா இந்த விடயத்தில் அக்கறையின்மை!**

வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை மீளச்செலுத்துவதில் நிலவுகின்ற சிரமங்களின் மத்தியில் பெருந்தொகை கடன் வழங்கிய சீனாவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து கடன் மறுசீரமைப்பு தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள தேசிய நெருக்கடியாகவுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசுகளும் வெளிநாடுகளிடம் கடன் பெற்றுள்ளன. அவ்வாறு கடன் பெறாமல் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. எனினும் சீனாவிடம் கடன் பெறுவதென்பது மிகவும் சிக்கலுக்குரியதாகுமென்கின்றனர் நிபுணர்கள்.

சீனாவிடம் பெற்றுக் கொண்ட கடனை இலங்கை மீளச்செலுத்துவதாயின் மேலும் மேலும் கடன் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தக் கடன்களையும் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதாலேயே சர்வதேச நாணய நிதியத்தை நாடுகின்ற நிலைமை ஏற்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, இலங்கை மாத்திரமன்றி மேலும் பல நாடுகள் சீனாவின் கடன் பொறியில் சிக்கியுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று சமீபத்தில் தகவல் வெளியிட்டிருந்தது. சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன் தொகைகளை மீளச் செலுத்த முடியாது போனால் உள்நாட்டு முதலீடுகளுக்கு சீனாவுக்கு இடமளிப்பது தவிர்க்க முடியாததாகி விடுமென்பதே உண்மை. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியனவற்றினால் வழங்கப்படும் கடன்களைப் போன்றல்லாது, சீனா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளை இலக்கு வைத்தே கடனுதவிகளை வழங்கி வருகின்றது. நீண்ட கால அடிப்படையில் கடன் வழங்கும் தந்திரோபாய ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இலக்கு வைத்து அவற்றை அபிவிருத்தி செய்வதென்ற போர்வையில் இந்தக் கடன்களை சீனா வழங்கி வருகின்றது.

உதாரணமாக ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய பகுதிகளை வர்த்தக ரீதியில் இணைக்கும் முக்கியமான ஓர் கடல் மார்க்கமாகக் காணப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு நிதி உதவி மற்றும் உட்கட்டுமான வசதிகளை வழங்கி வரும் சீனா, அவற்றுக்குக் கைமாறாக அந்நாடுகளில் இருந்து இயற்கை வளங்களை பெற்றுக் கொள்வதில் அதிக முனைப்பு காட்டி வருகின்றது.

சமூக பொருளாதார பாதிப்புகள் மற்றும் சுற்றாடல் பாதிப்புகள் குறித்து மதிப்பீடு செய்யாது, சந்தை வட்டி அடிப்படையிலேயே சீனா இலங்கைக்கு கடன் வழங்கியுள்ளது. சீனாவினால் சலுகை அடிப்படையில் கடன் வழங்கப்படுவதில்லை.

சீனா ஒரே கல்லில் இரண்டு கனிகளை பறிக்கும் வகையில் வெளிநாடுகளுக்கு கடன் வழங்கி வருகின்றது. சர்வதேசத்தில் இராஜதந்திர ரீதியில் செல்வாக்குச் செலுத்தவும், நாடுகளுடன் ஏற்றுமதியை விஸ்தரிக்கவும் சீனாவினால் இவ்வாறு கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

சீனா இதேவிதமாக பல நாடுகளில் தனது இராஜதந்திர மற்றும் பொருளாதார இலக்குகளை முன்னிலைப்படுத்தி அந்தந்த நாடுகளை கடன் பொறியில் சிக்க வைத்து அதன் ஊடாக நலன் ஈட்டிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனா சாதகமான நிலைப்பாட்டை விரைவாக அறிவிக்க வேண்டுமென்பதே இலங்கை மீது அக்கறை கொண்ட நாடுகளின் கோரிக்கையாக உள்ளது. இலங்கை தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதாயின் சீனாவுடனான கடன்மறுசீரமைப்பு அதிக பங்கு வகிக்குமென்பதே இதன் அர்த்தமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் பாரியதொரு பொருளாதார நெருக்கடியில் தற்போது சிக்கியுள்ளது. பொருளாதார மீட்சிக்காக இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனா சாதகமான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டுமென்றே பல நாடுகள் வலியுறுத்துகின்றன.

எஸ். சாரங்கன்...

# கண்டியில் இயற்கை அனர்த்தங்களை பார்வையிட்ட மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினர்

**மழையுடன் கூடிய காலநிலை காரணமாக கண்டி நகரில் இயற்கை அனர்த்தங்களினால் பல இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள இடங்களை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு கமகே தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர். பாதிப்புகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அண்மையில் அவர்கள் விஜயமொன்றினை மேற்கொண்டனர்.**





இந்த வகையில் அனர்த்தம் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள கண்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி, கண்டி தாதியர் கல்லூரி மற்றும் கண்டி பொத்குல் விஹாரை என்பன குழுவின் நேரடி அவதானத்திற்குட்படுத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

குறித்த கலவிஜயத்தின் போது புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் தடுப்புச்சுவர் சேதமடைந்து இடிந்து விழுந்ததுள்ளதாகவும் அதனால் குழந்தைகளின் பாதுகாப்புக்கு எந்த ஆபத்துக்களும் ஏற்படவில்லை எனவும் பொறியியல் சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தங்களின் போது தடுப்புச் சுவர்கள் இடிந்து விழுதல், மண்சரிவு, மண்திட்டுக்கள் சரிந்து விழுதல் போன்ற அனர்த்தங்கள் இடம்பெறாதிருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஆளுநர் உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.





மாகாண ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரட்ன, மாகாண பொறியியல் சேவைகள் பணிப்பாளர் ஏ. விக்கிரமாதித்தன், ஆளுநரின்ஊடக இணைப்பதிகாரி மஹீஸ்வர பீ .பீ. கிரிந்திகொட உள்ளிட்ட இன்னும் பல அதிகாரிகள் குழுவில் இணைந்து கொண்டிருந்தனர்.

எம்.ஏ.அமீனுல்லா...

# இணையவழி கொள்வனவுகளுக்கு Dialog வழங்கும் விலைக்கழிவுகள்

**Dialog.lk சில பிரத்தியேக சலுகைகள் மற்றும் விலைக் கழிவுகளை வழங்கி வருகின்றது. நீங்கள் ஒரு புதிய Home Broadband அல்லது TV இணைப்பைப் பெற்றுக் கொள்ள எண்ணியிருந்தாலோ அல்லது தற்போது வைத்திருக்கும் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிக்கு பதிலாக புதிய கையடக்க தொலைபேசி ஒன்றை பெற்றுக்கொள்ள எண்ணியிருந்தாலோ, அல்லது சிறப்பு சலுகைகளை எதிர்பார்க்கிறீர்கள் என்றாலோ Dialog இன் Online Store (www.dialog.lk) வழியாக Dialog Home Broadband, Dialog Television மற்றும் புத்தம் புதிய ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் மீது நவம்பர் மாதம் முழுவதும் பிரத்தியேக விலைக்கழிவுகளை பெற்றுக் கொள்ளலாம்.**




சலுகைகள் மற்றும் விலைக்கழிவுகள் மட்டுமல்லாமல், இணையவழி மூலமாக மேற்கொள்ளும் அனைத்து கொள்வனவுகளுக்கான விநியோகம் நாடு முழுவதிலும் இலவசமாக வழங்கப்படும். www.dialog.lk க்கு சென்று ஓர்டரை பதிவு செய்யலாம்.

மேலும், டயலொக் இன் 11.11 கொடுப்பனவு மூலம் ரூ. 5,990/ பெறுமதியான Dialog Home Broadband இணைப்பை ரூ. 2,990/ க்கு பெறலாம்.

அத்தோடு, Apple iPhone மற்றும் Samsung Galaxy S22 Ultra உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் உட்பட ஏனைய பொருட்களுக்கு 2022 நவம்பர் 30 வரை 38% வரையான விலைக்கழிவுகளும் வழங்கப்படும்.

ரூ. 5,990/ மதிப்புள்ள Dialog Television boxonly இணைப்பை ரூ. 4,490/ க்கு பெற்றுக் கொள்ளலாம். மேலும், இவற்றோடு ஒரு முழுமையான பிற்கொடுப்பனவு இணைப்பை ரூ. 8,090/ க்கும் Dialog Television ViU Mini இணைப்பினை ரூ. 8,090/க்கும் பெற்றுக் கொள்ளலாம். இந்த சிறப்பு விலைக்கழிவுகள் 2022 நவம்பர் 30 வரை மட்டுமே என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## சந்தேக நபரான சட்டத்தரணி ...

கடந்த 11 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது சட்டத்தரணி நுவன் போப்பகே சந்தேக நபராக பெயரிடப்பட்டிருந்தார். ஜனாதிபதி மாளிகைக்குள் அத்து மீறி அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக தெரிவித்து, இவ் விடயம் தொடர்பில் கொழும்பு மத்திய வலய குற்ற விசாரணை பணியகம் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி 71 பேரை அடையாளம் காண பொலிஸ் ஊடகப் பிரிவூடாக ஊடகங்களில் புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டன.

விசாரணை அதிகாரிகள் சம்பவத்தின் 59 ஆவது சந்தேக நபராக சட்டத்தரணி நுவன் போப்பகேயை பெயரிடுவதாக அறிவித்திருந்தனர்.

இதற்கு முன்னர் இவ்விவகாரத்தில் 58 பேர் கைது செய்யப்பட்டு அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நுவன் போப்பகே நீதிமன்றத்தில் சரணடைந்ததுடன், அவருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமையில் பெருமளவு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் முன் வைத்த விடயங்களை ஆராய்ந்த கோட்டை நீதிவான் திலின கமகே, சட்டத்தரணி நுவன் போப்பகேயை 05 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்தார்.

## இராணுவ மேஜர் உட்பட ...

சம்பவத்தின் போது வாகனத்தில் ஐந்து பேர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த இருவரும் கல்கமுவ மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஒருநாள் சேவையின் கீழ் ...

ஒரு நாள் சேவையில் நாளொன்றுக்கு 50 சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டபோதிலும், திடீர் வெளிநாட்டுப் பயணம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்த அவர், ஏனைய விண்ணப்பதாரர்கள் சாதாரண சேவையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் குறிப்பிட்டார்.

சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அட்டைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாதபோது, ஒரு நாள் சேவையின் கீழ் நாளொன்றுக்கு சுமார் 1,500 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு...

செய்துள்ளதாக வெளியிடப்பட்டு வரும் தகவல்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவித்தலை விடுத்து விடயங்களை தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில், ஆட்கடத்தல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்பன வேறு வேறானவை. சுற்றுலா விசாவினால் திருட்டுத்தனமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்வார்களானால் அது வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறையுடன் தொடர்புடைய விடயமல்ல. அரசாங்கம் என்ற வகையில் அது தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்ககப்பட்டுள்ளன. துபாய் ஊடாக ஓமானுக்கு பெண்களை அழைத்துச் சென்று அங்கு அவர்களை விற்பனை செய்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் தரகர்கள் சிலர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து விசேட குழுவொன்றை அமைத்து இலங்கைக்குள்ளும் விமான நிலையத்திலும் அதனுடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் மக்களை தெளிவுப்படுத்துவது அவசியமாகிறது.எவ்வாறாயினும் அரசாங்கம் என்ற வகையில் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

விமான நிலைய அதிகாரிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் இணைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் ஊழியர்களின் எண்ணிக்கையைஅதிகரிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆய்வு செய்வதை... (03 ஆம் பக்கத் தொடர்)

உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,..

சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்கும் நடவடிக்கைகளுக்கு பிரதான ஆளும் கட்சி தடையாக செயற்பட்டதால் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சி முழுமையாக தடைப்பட்டது.

அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சிறந்த விடயங்கள் பல உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கடினமான திட்டங்கள் சிலவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கொண்டுள்ள சமூக பொருளாதாரம் எவ்வாறெனினும் நாடு பாதிப்பில் இருந்து மீள்வதற்கான பல சிறந்த திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாட்டில் செயல்படும் முக்கிய நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்பட வேண்டும்.

மனித உரிமைகள் அனைத்து விடயங்களுக்கும் செல்வாக்கு செலுத்தும் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

## தொற்று நோய்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

தொற்று நோய்கள் மீண்டும் பரவு ம் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். எதிர்காலத்தில் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நாம் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

இலங்கையில் காசநோய் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்படுவதில்லை. இதன் காரணமாக நோயை அடையாளம் காண்பதற்கு தாமதம் ஏற்படுகிறது.

அதனால் தான் நோயை அகற்றுவதற்கான வாய்ப்பில்லாமல் போகிறது. இந்நிலையில் இது போன்ற நோய்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றார்.

## உலக வங்கி பிரதிநிதிகளுடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

உள்ளிட்ட குழுவினருடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அரச நிதிக் கண்காணிப்பு மற்றும் கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்தல், வரி நிர்வாகக் கொள்கையை மேம்படுத்தல், இறையாண்மை நிதித்துறையின் தொடர்பு மற்றும் கட்டமைப்பு ரீதியில் இடர் குறைப்பு, வலுசக்தித் துறையின் செயல்திறனை மேம்படுத்தல் மற்றும் காபன் வெளியேற்றத்தைக் குறைத்தல், கொள்கை நிச்சயமற்ற தன்மையைக் குறைத்தல் மற்றும் பொருளாதார போட்டித்தன்மையை அதிகரித்தல், அரச தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல், தனியார் மூலதனத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பிரோட்பேண்ட் சந்தையில் போட்டித் தன்மையை அதிகரித்தல், சமூக பாதுகாப்பு நிறுவனங்களைப் பலப்படுத்தல் மற்றும் விநியோகக் கட்டமைப்பை இலக்காகக் கொள்ளுதல் ஆகிய 08 துறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பான ஆலோசனைகளும் முன்வை க்கப்பட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் துறைசார் நிறுவனங்களின் அரச அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

அதன் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் ஹடட் ஸ்வோஸ் (FarisHadadZervos) உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதிக்கு இவ்விடயங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

## புலம்பெயர் இலங்கையருக்கான ...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் பணிக்குழுவின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் நீதி அமைச்சின் அதிகாரிகளுக்கிடையில் கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை வழமை நிலைமைக்கு கொண்டு வர அரசாங்கம் புலம்பெயர் இலங்கை மக்களின் முதலீடுகளை எதிர்பார்த்துள்ளது. இதன்படி, இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்களின் தடைகளை அரசாங்கம் அண்மையில் நீக்கியது. புலம்பெயர் அமைப்புகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் வெளிநாடு வாழ் இலங்கையர் தொடர்பான இந்த பணியகம் திறக்கப்படவுள்ளது.

இலங்கை மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இந்த பணியகம் தொடர்பான இணைப்பு அலுவலகங்கள் திறக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

## மலையக மக்களின்...

கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்கள் மிகவும் பின்தள்ளப்பட்ட மக்கள் இவர்கள் தொடர்பிலும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டுமென ஐ.நா பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளோம்.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன், கடந்த தினங்களில் ஐ.நா பிரதிநிதிகளை நானும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும், எம்.பி உதயகுமாரும் சந்தித்து கலந்துரையாடிய பொழுது மலையக மக்கள் நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டோம்.

வடக்கு, கிழக்குக்கு அப்பால் வாழ்கின்ற மலையக மக்களுக்கு அடிப்படை பிரச்சினைகள் அதிகமாகவே காணப்படுகின்றது. எனவே இவர்களையும் கருத்திற் கொண்டு இவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டுமென அவர்களிடம் வலியுறுத்தினோம்.

இதற்கு பதிலளித்த அவர்கள் எதிர்வரும் ஆண்டு ஐக்கிய நாடுகள் பேரவையின் அறிக்கையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உள்வாங்கப்படவுள்ளதாக உறுதியளித்தனர்.

## காலத்துக்கு பொருத்தமான ...

நாட்டில் தற்போதைய முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார ஸ்திர நிலை உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் தலைவர்கள் முறையாக செயல்படுகிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஏப்ரல் முதல் ஜுலை வரையிலான சம்பவங்களை நாம் நோக்கும்போது சில விடயங்கள் தெளிவாகின்றன. கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் சிறிதம்ம தேரர் தொடர்பில் நாம் பேச வேண்டியுள்ளது.

நாட்டின் சட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படுகிறதா? அவை தேவையில்லாத பிரச்சினைகளுக்கே வழி வகுத்துள்ளது.நிதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?.

கடன் மறு சீரமைப்பு தொடர்பில் பேசப்படுகிறது.சீன அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இங்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.30 வருட யுத்தத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் மத்திய தர வருமான நாடாக இலங்கை கணிக்கப்பட்ட போதும் தற்போது அது குறைந்த வருமானம் கொண்ட நாடாக குறிப்பிடப்படுகின்றது. நாட்டில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒழுக்கமற்றதாக முறையற்றதாக காணப்பட்டமையே அதற்கான காரணம்.மத்திய வங்கி சுயாதீனமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பமளிக்க வேண்டியது அவசியம்.

## சமஷ்டி முறையிலான...

உருவாக்குவது என்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சிங்கள தலைவர்களிடமும் சிங்கள இளைஞர்களிடமும் நாம் வினயமாக கேட்டுக் கொள்கின்றோம்.

2016 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் திகதி கூடிய அரசியலமைப்பு சபை கூட்டத்தில் ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், விருப்பு வாக்கு முறைமையை நீக்குதல் மற்றும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணல் போன்ற முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் ஐந்து ஆண்டுகள் கடந்தும் அந்த தீர்மானங்கள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தந்தை செல்வா ஒப்பந்தம்,டட்லி செல்வா ஒப்பந்தம்,ரணில் பிரபா ஒப்பந்தம்,இலங்கை இந்திய ஒப்பந்தமென பல்வேறு ஒப்பந்தங்கள் மற்றும் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பின்னணியில் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோர் நித்திரையில் இருந்து எழுந்ததைப் போன்று கருத்துக்களை முன் வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தும் போது இனவாதத்தை விடுத்து பொதுத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

இனவாதம், மதவாதம் தான் இந்த நாட்டை இந்தளவுக்கு சீரழித்துள்ளதென்பதை முதலில் உறுதியாக விளங்கிக் கொள்வது அவசியம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது பொறுப்பல்ல, அது எமது கடமையென குறிப்பிட்டிருந்தார். அடிக்கடி கொள்கையை மாற்றிக் கொண்டதால் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற அவரால் முடியவில்லை.

வடக்கு தமிழ் அரசியல் தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாரென ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் அதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கலைஞர் கருணாநிதியை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஒப்பந்தத்தையும், மாகாண சபைகளையும் எட்டி உதைத்தது யார்?

இன்று, பிச்சை வேண்டாம், நாயை பிடி!" என்ற மாதிரி, 13ம் திருத்தத்தை யாவது முழுமையாக அமுல் செய்யுங்களேன் என ஓலமிடுவது யார்? இந்திய நாட்டு பிரதமராக இருந்த, மீண்டும் பதவிக்கு வரவிருந்த, ராஜீவின் மரணத்துக்கு காரணத்தை மறந்து விட்டு இப்போது இந்திய அரசு தலைவர்களிடம், அதிகாரிகளிடம் கோரிக்கை மேல் கோரிக்கை வைப்பது யார்? இன்றும்கூட சகோதர முஸ்லிம் மக்களின் தேசிய அபிலாஷைகளை உள்வாங்காமல், வடக்குகிழக்கு இணைப்பு என நிபந்தனை விதிப்பது யார்?

கருணாநிதியும், இந்திய தலைவர்களும் அதி உத்தமர்கள் என நான் கூற வரவில்லை. கருணாநிதியை கருணை நிதி எனவும் நான் கூறவில்லை. ராஜிவ் காந்தியை மகாத்மா காந்தி எனவும் நான் கூற வரவில்லை. ராஜிவ் அனுப்பி வைத்த இந்திய அமைதி படை இங்கே கொலைகள், பாதகங்கள் செய்யவே இல்லை எனவும் நான் கூற வரவில்லை. “ஆர்மி” என்ற இராணுவம் எல்லா நாட்டிலும் ஒன்றுதான். கட்டவிழ்த்து விட்டால் இந்திய, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்க இராணுவம் எல்லாம் ஒன்றுதான்.

இந்தியா ஒரு நாடு. இலங்கை இன்னொரு நாடு. தமது "தேச நலன்கள்" அவரவருக்கு முக்கியம் என்பதும், இந்தியர்கள் எமக்காக வரக்கூடிய தொடுவானம் எதுவரை என்பதும், நமது தமிழ் அரசியல் மேதைகளும் விளங்கி இருந்திருக்க வேண்டும். அது சிங்கள அரசியல் மேதைகளுக்கு நன்கு தெரிந்து இருந்தது. அதனால்தான் அவர்கள் கெட்டிக்காரத்தனமாக காய் நகர்த்தி தமது இலக்கை அடைந்தார்கள்.

இதிலும்கூட, கருணாநிதி இலங்கை தமிழருக்காக, தமிழ் நாட்டில் இரண்டு முறை தனது திராவிட முன்னேற்ற கழக மாநில ஆட்சியை இழந்தார் என்பது இங்கே எத்தனை தமிழ் மேதைகளுக்கு ஞாபகம் இருக்கிறது? ஆகவே, சும்மா கலைஞர் கருணாநிதியை குறி வைத்து கரித்து கொட்டுவதை நிறுத்துங்கள்.

## 'வைக்கிங் மார்ஸ்' சொகுசு ...

கப்பலில் வந்த சுற்றுலாப் பயணிகள், இலங்கையின் முக்கிய இடங்களை கண்டுகளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கண்டி, பின்னவெல, காலி போன்ற நகர்களுக்கு செல்வதுடன் கொழும்பின் சில முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

முத்துராஜவெல மற்றும் ஆற்றில் படகுச் சவாரி, விவசாயக் கிராமங்களை பார்வையிடுதல், முச்சக்கரவண்டி சுற்றுப்பயணங்கள், கலாசார நிகழ்ச்சிகள், சமையல் அனுபவங்கள், கலை மற்றும் கட்டடக்கலைச் சுற்றுலாக்கள் மற்றும் இலங்கையின் தேயிலையின் சிறப்பு போன்றவற்றை இவர்கள் அனுபவிக்கவுள்ளனர்.

## தூதரக அதிகாரி ஒருவர்...

செய்யப்படுவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள அபுதாபிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள பெண்களில் சுமார் 12 பேர் கடந்த 16 ஆம் திகதி அங்கிருந்து பலாத்காரமாக ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக புதிய தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த ஆட் கடத்தல் சம்பவத்தில் இலங்கையின் விமான நிலையத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தொடர்பு கொண்டுள்ளதாகவும், ஓமானில் பணியாற்றும் தூதரக அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதன்படி ஓமானில் பணியாற்றும் இலங்கை தூதரக அதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

## டொலரின் பெறுமதியை குறைக்க...

உள்ளூர் வர்த்தகங்களை காப்பாற்ற தற்போதைய பாரிய வட்டி வீதங்கள் உடனடியாக குறைக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். நிதி அதிகாரங்களைக் கொண்ட பாராளுமன்றம் கட்டுப்படுத்தி வட்டி வீதங்களுக்கு வரம்பை விதிக்க வேண்டும். வட்டி வீதங்கள் தொடர்ந்தும் அதிகரித்தால் உள்ளூர் வர்த்தகங்கள் வீழ்ச்சியடையும் எனவும் அவர் குறிப்பிட்டார். இதனால் மக்கள் வேலைகளை இழப்பர் மற்றும் நாட்டில் வறுமை நிலைகள் வேகமாக உயரும் என்பதால் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உள்ளூர் வர்த்தகங்கள் உதவியுள்ள அதேவேளை நாட்டின் வீழ்ச்சிக்கு ஒருசில நிறுவனங்கள் பங்களிப்பு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச அழுத்தங்களுக்கு அரசாங்கங்கள் அடிபணியக் கூடாது எனவும், இலங்கை மக்களின் நலன்களுக்காக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

எனவே நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வுகளை வழங்குவதற்கும் ஜனாதிபதிக்கும் அவரது கொள்கைகளுக்கும் ஆதரவளிக்குமாறு பாராளுமன்றத்திலுள்ள அனைத்து தரப்பினரிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஊரகஹ இந்திக்கவின்...

சிறுவன் மற்றும் அவரது தந்தை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபரையும் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபரையும் கைதுசெய்ய விசேட அதிரடிப்படையினர் சென்ற போதே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சந்தேக நபர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவரும் சிறு காயங்களுக்குள்ளாகி மேலதிக சிகிச்சைக்காக மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட இருவரும், தற்போது வெளிநாட்டிலுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள கும்பலொன்றின் தலைவரும் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரருமான ஊரகஹ இந்திக்கவின் பிரதான உதவியாட்களென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## 'தாமரைக் கோபுரம்'...

உடன்படிக்கையூடாக, அடுத்த 03 ஆண்டுகளுக்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் இதற்காக முதலீடு செய்யப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

தாமரைக் கோபுரத்தை மையப்படுத்தி டி.ஆர். விஜேவர்தன வீதி முழுமையாக சுற்றுலாப் பயணிகளை கவரும் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த பகுதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. (இன்றைய நாணயமாற்று நிலவரத்தின்படி ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் 36,722 கோடி ரூபாவாக கருத முடியும்).

## 10 அம்சக் கோரிக்கைகளை...

எழுத்து மூலம் கனேடிய தமிழர் பேரவை தனது 10 அம்சக் கோரிக்கைகளை மீண்டுமொரு முறை சமர்ப்பித்திருக்கிறது.

அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும், இராணுவத்தின் வசமுள்ள அனைத்து தனியார் காணிகளையும் விடுவிப்பதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்த வேண்டும்,

இலங்கை அரச நிர்வாகத்தின் கெடுபிடிகளின்றி அனைத்து தமிழர்களும் உயிர் நீத்த தமது உறவினரை நினைவுகூர அனுமதிக்க வேண்டும், பலாலி விமான நிலையத்தைப் பாவனைக்கு திறந்து விடுவதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை அனுமதித்து வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு இடமளிக்க வேண்டும். இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மையத்தை யாழ். மாநகரசபையிடம் கையளிக்க வேண்டும், 2021 இல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானம் 46/1ஐ நடைமுறைப்படுத்த வேண்டும்,

13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாண சபைத் தேர்தல்களையும் விரைவில் நடத்த வேண்டும், நாட்டின் இதர பாகங்களிலும் நடைமுறையிலுள்ள அதே தரத்தில் அமையும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பாதுகாப்பு நிர்வாகம் சீர்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் தேவைக்குமதிக்கமான படையினரைக் குவிக்காமல் இதர மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் படையினரின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் படைப் பரம்பல் இருக்க வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வியாபார நடவடிக்கைகளை (பண்ணைகள், உணவகங்கள்,வெதுப்பகங்கள்), நிறுத்த வேண்டும்.

இவ்வியாபாரப் போட்டிகளினால் உள்ளூர் விவசாயிகளும் வியாபாரிகளும் கடும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

## பொருளாதார ஸ்திரத்தன்மை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஸ்திரத்தன்மையுடன் தொடர்புடைய புதிய சட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு உபகுழு அண்மையில் (15) கூடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விசேடமாக, நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைவதற்குக் காரணமான விடயங்கள், இவற்றில் தற்பொழுதுள்ள சட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக உள்ளனவா? போன்றவை தொடர்பில் கலந்துரையாடுவதும் அது தொடர்பில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடுவது முக்கியமானதென அவர் தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் போது நாட்டின் சட்டக் கட்டமைப்பில் ஏற்படுத்தவேண்டிய மறுசீரமைப்புகள் தொடர்பில் இதன்போது நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தனர். மத்திய வங்கியின் பணிகள், திறைசேரியின் பணிகளும் பொறுப்புகளும், அரசாங்கத்தின் பணிகளும் பொறுப்புகளும், அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வர்த்தக சமூகத்தினரின் பொறுப்புகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அதேபோன்று பாரியளவிலான ஊழல் எதிர்ப்பு செயன்முறையொன்றின் அவசியம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றிய பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன.

இதுவரை 55 புதிய சட்டங்களை உருவாக்குவது மற்றும் சட்ட மறுசீரமைப்புகள் இடம்பெற்று வருவதாக நீதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நாட்டின் பெருமையை... (03 ஆம் பக்கத் தொடர்)

மேலும் அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

எச். எஸ்.சரத்துடனான எனது உறவு நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்கிறது. நான் இளைஞர் விவகார அமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும் இருந்த காலத்தில் அவரது கண்காட்சிகளில் கலந்து கொண்டேன்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் கல்வி அமைச்சின் பணிகளில் அவரைப் பங்கேற்கவும் செய்தேன். அதன் மூலம் அவருடைய சித்திரக் கலை தொடர்பான திறமையை அடையாளம் காணும் வாய்ப்பும் கிடைத்தது.

கல்வி அமைச்சு இசுருபாயவுக்கு மாற்றப்பட்டபோது, எச். எஸ்.சரத்திடம் அமைச்சர் அலுவலகத்திற்கு ஒரு ஓவியத்தை வழங்க முடியுமா? என்று அவரிடம் கேட்டேன். அன்று அவர் செலலிஹினியை சித்தரிக்கும் பெரிய ஓவியம் ஒன்றைக் கொடுத்தார்.எனக்குத் தெரிந்தவரை துரதிஷ்டவசமாக அந்த ஓவியம் இன்று அமைச்சில் இல்லை.

ஒரு நாள் பெரிய தொகைக்கு விற்கலாம் என்பதால் யாராவது அதனை வீட்டுக்கு கொண்டுபோய் வைத்திருக்கலாம்.

இருப்பினும், எச். எஸ்.சரத் பல்வேறு வகையான பணிகளில் பங்கேற்றார். அவரது திறமை பற்றி புதிதாகக் கூறத் தேவையில்லை. இந்தப் ஓவியங்களைப் பார்த்தாலே புரியும்.

நமது 75 ஆவது சுதந்திர தினத்தை அடுத்த ஆண்டு கொண்டாட தயாராகி வருகிறோம். சரத் போன்ற திறமையான இளம் கலைஞர்களும் உள்ளனர். சரத் அவர்களின் தலைமையில் மற்ற கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சியை நடத்த நினைத்தேன்.

இந்தக் கண்காட்சியை பொருத்தமான இடத்தில் நடத்தலாம். அதன் மூலம் எச். எஸ்.சரத் போன்ற திறமையான ஓவியர்கள் நம் நாட்டில் உருவாகுவார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, இலங்கை மன்றக் கல்லூரியின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சி நாளை 20 ஆம் திகதி வரை கொழும்பு லயனல் வென்ட் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## வெளிநாட்டு சேவைக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

தரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவலையை வெளியிட்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதரகங்களின் நுழைவாயில்களுக்கு அருகில் உள்ள நடைபாதைகளில் பல இலங்கையர்கள் காலை முதல் நண்பகல் வரை நீண்ட வரிசையில் நிற்பது குறித்து உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

இது சிறந்ததொரு நிலைமையல்ல என்றும், இதனைத் தவிர்ப்பதற்கு முறையான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அமைச்சின் நாளாந்த செயற்பாடுகளுக்கு அப்பால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முன்வைத்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தியிருப்பதுடன், இதுபோன்ற சர்வதேசத்தின் அக்கறைகளை உள்நாட்டில் முகம் கொடுப்பதற்கான வழிகளை ஆராய்வதில் வெளிவிவகார அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் இங்கு விளக்கமளித்தார்.

கடன் மீள்கட்டமைப்புச் செயற்பாடு தொடர்பில் பல்வேறு சர்வதேச நாடுகளுடன் ஒருங்கிணைந்த அடிப்படையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆட்கடத்தல்காரர்களால் நடுக்கடலில் கைவிடப்பட்ட 303 இலங்கையரைக் காப்பாற்றும் முயற்சிகளில் வெளிவிவகார அமைச்சின் சேவைகள் வார இறுதி நாட்களிலும் வழங்கப்பட்டமை குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டினார். அது மாத்திரமன்றி கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக கைது செய்யப்பட்டது முதல் அவருக்கான சட்ட ரீதியான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துடன் தொடர்ச்சியாக இணைந்து செயற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

அது மாத்திரமன்றி லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் உலக சுற்றுலா மாநாட்டில் இலங்கை தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. வெளிவிவகார அமைச்சினால் சர்வதேச மட்டத்தில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் உரிய பிரசாரம் கிடைப்பதில்லையென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






## கற்றல் உதவிகள்

<u>லுணுகல நிருபர்</u>

பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று (19) சனிக்கிழமை பசறை தமிழ் தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பதுளை ப்ரண்லிஷிப் அமைப்பின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

மீதும்பிட்டிய இல 01 தமிழ் வித்தியாலயம், மீதும்பிட்டிய இல 02. தமிழ் வித்தியாலயம், டெமேரியா இல 01 . தமிழ் வித்தியாலயம், டெமேரியா இல . 02 தமிழ் வித்தியாலயம், பசறை இல. 04 தமிழ் வித்தியாலயம், தன்னுகை தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

## மஹரகம அபெக்ஸா வைத்தியசாலைக்கு மாணவிகள் கூந்தல் தானம்

ருவன்வெல்ல பொது நூலகம் மற்றும் வாசகர் சமூகம் என்பன இணைந்து மஹரகம அபெக்ஸா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறும் நோயாளர்களுக்கு தேவையான கூந்தலை தானமாக வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ருவன்வெல்ல பொது நூலக வளாகத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில், 135 பேர் வரை தமது கூந்தலை தானமாக வழங்க முன்வந்ததுடன், பெரும்பாலான மாணவிகள் கலந்துகொண்டனர்.

இதற்கு ருவன்வெல்ல காயத்ரி சலூன் தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

இந்நிகழ்வில் ருவன்வெல்ல பிரதேசசபையின் தவிசாளர் சமன் குலசூரிய, செயலாளர் உதய ஜயவிக்ரம உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# டெல்மார் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக மக்கள் போராட்டம்



உடப்புசல்லாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெல்மார் கீழ் பிரிவு தோட்டத்தொழிலாளர்கள் தோட்டநிர்வாகத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

டெல்மார் தோட்ட நிர்வாகம் தோட்ட தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கியுள்ள தேயிலை செடிகளை தொழிலாளர்கள் முறையாக பராமரித்து வருகின்றனர்.

இந்நிலையில் தொழிலாளர்களின் பராமரிப்புக்கென வழங்கப்பட்டுள்ள தேயிலை செடிகளுக்கு தோட்ட நிர்வாகம் உரம் மற்றும் மருந்துகளை இலவசமாக வழங்குவதாக உறுதியளித்தது.

ஆனால் கடந்த மாதம் தோட்ட நிர்வாகம் தேயிலை செடிகளுக்கு தெளிக்க வழங்கியுள்ள மருந்துகளுக்கு தலா ஒரு தொழிலாளியிடம் 7000/=ரூபா பணம் அறவிட்டுள்ளதாக தொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் தேயிலை செடியை பராமரித்து அதில் பறிக்கப்படும் கொழுந்தை தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக்கே வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் தோட்ட நிர்வாகம் இலவசமாக வழங்குவதாக கூறிய மருந்துக்கான பணத்தை தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்துக்கான பணத்தில் அறவிடுவதால் தாம் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் பணியை மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்கள் தொழிலாளர்களின் சலுகையை முறையாக வழங்காது ஒரு சிலருக்கு மாத்திரம் வழங்கி பாரபட்சம் காட்டுவதாகவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறான உத்தியோகஸ்தர்களை கடமையிலிருந்து விலக்க வேண்டுமெனவும் தொழிலாளர்கள் முறையிட்டுள்ளனர்.

இதன்போது தொழிலாளர்களின் முறைப்பாட்டை கேட்டறிந்த டெல்மார் தோட்ட நிர்வாக உதவி அதிகாரி முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும்,தேயிலை செடிகளுக்கு தெளிக்கும் மருந்துக்கு பணம் அறவிடாது மருந்தை இலவசமாக வழங்க உறுதியளிப்பதாகவும் தெரிவித்தார். இதனை தொடர்ந்து தொழிலாளர்கள் தமது வழமையான பணிக்கு சென்றனர்.

# நுவரெலியாவில் அனர்த்த தடுப்புத்திட்டம் ஆரம்பம்

<u>தலவாக்கலை குறூப் நிருபர்</u>

இலங்கையின் அனர்த்த தடுப்புத்திட்டம் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் (17) வியாழக்கிழமை மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன. வேர்ல்ட் விஷன் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத்திட்டம் நுவரெலியா, வலப்பனை மற்றும் அம்பகமுவ கோரல பிரதேச செயலகப்பிரிவுகளில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.



நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாண்டு அனர்த்த தடுப்பு மற்றும் நிவாரணம், உணவுப் பாதுகாப்பு, சிறுவர் போசாக்கு குறைபாட்டை நீக்குதல் போன்றவற்றுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வும் இதன்போது இடம்பெற்றது. அதுமட்டுமின்றி, எதிர்வரும் ஆண்டுகளில் நுவரெலியா மாவட்டத்தில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சுஜிவா போதிமான (நிர்வாகம்), பிரதேச செயலாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# நிதி நிறுவனங்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

<u>(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)</u>

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் பொலிஸ் முறைப்பாடுகளின்றி வாடிக்கையாளர்களின் வாகனங்களை பறிமுதல் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படுமென இரத்தினபுரி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனக வீ ரசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொடவின் கேள்விக்கு பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தகவல் தருகையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் பொது மக்கள் பெரும் கஷ்டமான நிலைமையில் வாழ்கின்றனர்.

இதனால் மத்திய வங்கி பொதுமக்களுக்குச் சில சலுகைகளை வழங்கியுள்ளது.

சலுகைகளை வழங்காது சில லீசிங் நிறுவனங்கள் பொது மக்களின் வாகனங்களை அபகரிப்பது சட்டவிரோதமாகும்.

அவ்வாறு அபகரிக்க முடியாது. வாடிக்கையாளர்கள் மாதாந்த கட்டணங்களைச் செலுத்தாவிட்டால் அதுபற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும். அதன்பின்னர் பொலிஸாரின் துணையுடன் சென்றே வாகனங்கள் குறித்த சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வாகன தவணை கட்டணங்கள் செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையுள்ள போதும் பொலிஸ் துணையுடன் சென்றே அவ்வாகனங்களை அபகரிக்க முடியும்.

இச்சட்டங்களை மீறி நடந்து கொண்டால் இந்நிறுவனங்களின் வாகனங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய முடியும். அதன் பின்னர் குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# நாளை நவராத்திரி இறுதி போட்டிகள்

<u>( எம்.ஏ.அமீனுல்லா)</u>

மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண மட்ட இறுதி நவராத்திரி போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் கண்டி கலைமகள் மகா வித்தியாலயத்தில் போட்டிகள் நடைபெறுமென மத்திய மாகாண தமிழ்ப்பிரிவுக்கு பொறுப்பான உதவிப்பணிப்பாளர் பெரியசாமி விக்னேஷ்வரன் தெரிவித்தார்.

இவை மத்திய மாகாணத்தில் மாத்திரம் நடைபெறும் போட்டிகளாகும்.

பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம் என்ற ரீதியில் நவராத்திரி தின போட்டிகள் நடைபெற்று அவற்றில் வெற்றி பெற்ற மாணவர்கள் இறுதிப்போட்டிகளில் பங்கேற்பார்கள்.

தேவாரம், பேச்சு, கட்டுரை ஆகிய போட்டிகள், வகுப்புக்களின் அடிப்படையிலான ஐந்து பிரிவுகளின் கீழ் இடம்பெறும். சைவ வினாவிடைப்போட்டிகள் தரம் ஆறு முதல் ஒன்பது வரையிலான கனிஷ்ட பிரிவாகவும், தரம் 10 முதல் 13 வரையிலான சிரேஷ்ட பிரிவாகவும் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



பதுளை பிராந்திய ஹொப்டன் பிரஜாசக்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச பல் மற்றும் வாய்வழி சுகாதாரம் தொடர்பான முகாமொன்று அண்மையில் இடம்பெற்றது. (படம்: லுணுகல நிருபர்)

# ஹற்றனில் நடமாடும் சேவை

<u>ஹற்றன் சுழற்சி நிருபர்)</u>

ஹற்றன் பிரதேச மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையொன்று ஹற்றன் D.K.W கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த நடமாடும் சேவையில், பிறப்புச் சான்றிதழ் நகல்கள், திருமணச் சான்றிதழ் நகல்கள், தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஒரு நாள் சேவை, குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகள், மாணவர்கள் இடைவிலகல்கள், பதிவு செய்யப்படாத திருமணங்களைப் பதிவு செய்தல், பொது நலன் தொடர்பான பிரச்சினைகள், சிறுநீரகப் பிரச்சினைகள் மற்றும் ஊனமுற்ற நோயாளிகள் மற்றும் பொலிஸாரின் அறிக்கைகளைப் பெறுதல் உட்பட பல பிரச்சினைகளுக்கு நடமாடும் சேவை மூலம் தீர்வுகள் கிடைத்தது.

நடமாடும் சேவையில் ஹற்றன் டிக்கோயா நகர சபை தலைவர், அம்பகமுவ பிரதேச செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம சேவக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



ஐக்கிய மக்கள் சக்தியின் 'கல்வி ஊழியர் சங்கத்தின்' கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புச் செயலாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஹிதாயத் சத்தார் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் 'சமகி கல்வி ஊழியர் சங்கத்தின்' தலைவர் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேனவினால் வழங்கி வைக்கப்பட்டது.




தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் பதுளை எப். Z. ஓ. எய்ச் நிறுவனத்தினால் பதுளை மாவட்ட உள்ளூராட்சி மன்ற தமிழ், சிங்கள பெண் உறுப்பினர்கள் மற்றும் சமூக மகளிர் அமைப்பினர் ஆகியோருக்கான "தலைமைத்துவம் மற்றும் பால்நிலை சமத்துவம்" என்ற தலைப்பிலான வதிவிட செயலமர்வு கிராண்ட் ரீஜென்சி விடுதியில் நேற்று நடைபெற்றது. (படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)


# காடழிப்பு அதிகரிப்பு; மயில்கள் கிராமங்களை நோக்கி படையெடுப்பு

<u>(இரத்தினபுரி சுழற்சி நிருபர் )</u>

பலாங்கொடையில் பல கிராமப்புற பகுதிகளை மயில்கள் ஆக்கிரமித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். பலாங்கொடை நகருக்கு அண்மித்த கஹட்டபிட்டி, ஹபுகஹகும்புற, பட்டுகம்மன உட்பட்ட பெரும் பரப்புக்களில் இவை சஞ்சரிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவை நெல், மரக்கறி, பழவகைகளை உண்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இவற்றின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அவற்றின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுக்கோள் விடுத்துள்ளனர். இதேவேளை வகை தொகையின்றி காடுகள் அழிக்கப்பட்டு வருவதனால் மயில்கள் காடுகளை விட்டு உயிர்ப்பாதுகாப்புக்கருதி கிராமங்களை நாடிவருவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 நவம்பர் 19
சனிக்கிழமை

# மோப்ப நாயின் உதவியுடன் போதைப்பொருளுடன் மூவர் கைது

யாழ்.விசேட நிருபர்



நெல்லியடியில் மோப்ப நாயின் உதவியுடன் போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸார், மோப்ப நாயின் உதவியுடன் தமது பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, கரணவாய், தும்பளை, குடவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள், 83 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 80 கிராம் கஞ்சா ஆகியவற்றுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்காக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# துணுக்காய் பிரதேசத்தில்

# வறுமைக்கோட்டின் கீழ் 238 குடும்பங்கள்

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன்



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

துணுக்காய் பிரதேசத்தில் 238 குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இனம்காணப்பட்ட குடும்பங்களுக்கு பொருளாதார மறுமலர்ச்சி மையங்கள் ஊடாக தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவில் உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேசத்தில் 238 குடும்பங்கள் மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்கின்றனர். அவ்வாறு இனம் காணப்பட்ட குடும்பங்களை கிராமங்கள் தோறும் தெரிவுசெய்து அரசாங்க கொள்கைகளுக்கமைய மாவட்ட ரீதியாக பொருளாதார மறுமலர்ச்சி மையங்களை உருவாக்கியுள்ளோம்.

மாவட்டத்தில் 136 கிராமங்கள் உள்ளன. அந்த வகையில் 136 பொருளாதார புத்தெழுச்சி மையங்களை உருவாக்கி ஒவ்வொரு கிராமங்களுக்கும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் சென்று அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

துணுக்காய் பிரதேசத்தில் மூன்று இடங்களில் மறுமலர்ச்சி மையங்களின் உத்தியோகத்தர்கள்,கிராம மட்ட அமைப்புக்கள், வணக்கஸ்தலங்களின் தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்தியுள்ளனர். துணுக்காய் பிரதேசத்தில் மிகவும் பொருளாதார கஷ்டத்தில் 238 குடும்பங்கள் வாழ்கின்றனர். ஐந்து வயதுக்குட்பட்ட 100 பேர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர பாதிக்கப்பட்ட 39 கர்ப்பிணித் தாய்மார்களும் இனம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான போசாக்கு, வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடுகளையும் அங்குள்ள மையங்களின் உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம், உணவு வங்கி என வணக்கஸ்தலங்களை மையமாகக் கொண்டு ஒரு ஏற்பாட்டையும் செய்துள்ளோம். கிராமத்தில் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் உணவுகளை ஏனைய உணவு தேவைப்படும் மக்களுக்கு வழங்கிவைப்பதற்கான மையமொன்றையும் உருவாக்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பூந்தோட்டம் முகாமில் போதைப்பொருள் பாவனையாளர்கள் 121 பேருக்கு புனர்வாழ்வு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் போதைப் பொருளுக்கு அடிமையாகிய 121 பேர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தங்கவைக்கப்பட்டு புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடபகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். இவர்கள் பொலிஸாரால் அழைத்துவரப்பட்டு புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவர் புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பித்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐயப்பன் விரதம் ஆரம்பம்



யாழ்.விசேட நிருபர்

மகரஜோதி மண்டல பெருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகியது. ஐயப்பன் ஆலயங்களில் திருமாலை அணிந்து, பக்தர்கள் ஐயப்பன் விரதம் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், உரும்பிராய் தெற்கு சாட்டுபத்துார் சபரிபீட தேவஸ்தானத்தில் எதிர்வரும் தைமாதம் 14ஆம் திகதி தைப்பொங்கல் தினம் வரையில் 60 நாட்களுக்கு மண்டல விரத பூஜைகள் இடம்பெறவுள்ளன.

தினசரி மாலை 6 மணிக்கு அபிஷேகம், பூஜை, பஜனை, படிப்பூஜை ஆகியன இடம்பெறவுள்ளது.

# பிள்ளைகள் குற்றம் செய்தால் தண்டிக்காது கண்டித்து வளர்க்க வேண்டும்



## வடக்கு மாகாண இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு.இ.வரதீஸ்வரன்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

இளம் சமூகத்தினரை ஒன்றிணைத்து நல்ல பண்பாடுகளையும் ஆன்மீகத்திலும் ஈடுபாடு கொண்டவர்களாக வளர்த்தெடுக்க நாம் முனைய வேண்டும். பிள்ளைகள் குற்றம் செய்தால் தண்டிக்காது கண்டித்து வளர்க்க வேண்டுமென வடக்கு மாகாண கல்வி , பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு.இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

யுத்த சூழ்நிலை காலத்தில் நான் இங்கு கடமையாற்றினேன். வர்த்தக நிலையங்கள் இல்லாத நேரத்திலும் அந்த சூழ்நிலையிலும் இங்குள்ள மக்கள் எங்களை நன்கு பராமரித்தார்கள்.

நீண்ட காலம் நான் இந்த மண்ணில் சேவையாற்றுவதற்கு என்னை அர்ப்பணித்திருந்தேன். இதை நான் இங்கு மட்டும் சொல்லவில்லை. யாழ்.பகுதியிலும் மன்னார் மக்களின் நல்ல பண்பை பறைசாற்றி வருகின்றேன்.

இந்த பண்புகளைத் தொடர்ந்து இங்குள்ள பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அந்த காலத்தில் நாங்கள் குற்றம் செய்தால் தண்டிக்கப்பட்டோம்.

பிள்ளைகள் குற்றம் செய்தால் தண்டிக்காது கண்டித்து வளர்க்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு யாராவது நல்ல பழக்க வழக்கங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# ஐ.நா குழுவினர்,யாழ்.மாநகர முதல்வர் இடையில் சந்திப்பு

யாழ். விசேட நிருபர்



ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கும் யாழ்.மாநகர மேயர் வி.மணிவண்ணனுக்கும் இடையிலான சந்திப்பொன்றுநேற்றையதினம்வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்கள் திணைக்கள ஆசிய பசுபிக் பிரிவுக்கான பணிப்பாளர் பீற்றர் டியு, அரசியல் விவகார அதிகாரி அல்மா சாலியு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாண மாநகர சபைக்கு விஜயம் செய்திருந்தனர்.

சந்திப்பின் நிறைவில் ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கிவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருகைதந்த ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினர் பல்வேறு தரப்புகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# விடுவிக்கப்பட்ட ராஜீவ்காந்தி கொலையாளிகள்

# பொதுவாழ்வை அனுபவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அருட்தந்தை மா.சத்திவேல்

ஓமந்தை விஷேட நிருபர்

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையைச் சேர்ந்த நால்வரும் முழுமையான விடுதலை வாழ்வை அனுபவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையை சேர்ந்த நால்வரும் முழுமையான விடுதலை வாழ்வை அனுபவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக நால்வரின் விருப்பத்துக்கமைய தீர்மானம் எடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் தங்கள் வாழ் நாளின் பெரும் பகுதியை சிறையில் கழித்துவிட்டனர். சிறை வாழ்வில் மரணத்தோடு போராடி மரண வாயிலையும் எட்டிப் பார்த்தவர்கள் இவர்கள். விடுதலை நீதி சார்ந்த விடை மட்டுமல்ல.

அது வாழ்வு சார்ந்ததுமாகும். இவர்களுக்கு எஞ்சி இருக்கின்ற வாழ்வை சுதந்திரமாக அனுபவிக்க இடமளிக்க வேண்டும்.

மேலும் இவர்கள் நால்வரையும் இலங்கைக்கு அனுப்ப இலங்கையிடம் ஒப்புதல் பெறவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அதனை நிறுத்தி அவர்கள் விருப்பத்துக்கு இடமளிக்க வேண்டும் என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மின்சார திருட்டில் ஈடுபட்ட இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கோப்பாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட இலங்கை மின்சார சபையினர், பொலிஸாரின் உதவியுடன் சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று பயன்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இரணைமடு குளத்துக்குரிய காணிகளில் சட்டவிரோத பயிர்செய்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி இரணைமடுகுளத்துக்குரிய காணிகளில் சட்டவிரோதமாக காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து நேற்றுமுன்தினம் பிற்பகல் அவற்றை அழிக்க முற்பட்ட வேளை அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்துக்குரிய ஒதுக்கீட்டு பிரதேசங்களை ஆக்கிரமித்து பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பில் மாவட்ட மட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதற்கமைய நேற்றுமுன்தினம் அவற்றை அழிப்பதற்காக பொலிஸாருடன் சென்ற வேளை நீர்ப்பாசன திணைக்களத்தினருக்கும் சட்டவிரோதச் செய்கையாளர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் உள்ள ஒதுக்கீட்டு பிரதேசங்களில் சட்டவிரோதமாக பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. எனவே சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கையை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



# சாவகச்சேரி பிரதேசசபை பாதீடு நிறைவேற்றம்

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரி பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது வாக்கெடுப்பின் போதே வரவுசெலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் கந்தையா வாமதேவன் தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் 25 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பாதீடுக்கு ஆதரவாக 17உறுப்பினர்களும் எதிராக ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர்.அதேவேளை 07 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது நடுநிலைமை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நானாட்டான் பிரதேச சபை பட்ஜட் நிறைவேற்றம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

நானாட்டான் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது

நானாட்டான் பிரதேச சபையின் 58 ஆவது சபை அமர்வு பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதியின் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பாதீடு 40 மில்லியன் மேலதிகமான நிதி பல்வேறு அபிவிருத்தி சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

முருங்கன் உப அலுவலகப்பிரிவில்இவ்வாண்டு (2022) கட்டி முடிக்கப்பட்ட கடைத்தொகுதி மூலமாக கிடைக்கப்பெற்ற நன்மதிப்புத்தொகை 16.4 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டு நிதியில் அபிவிருத்திக்காக நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது.

இந்நிதி நானாட்டான் நகர்ப் பகுதியில் 2023ஆம் ஆண்டு கடைத்தொகுதி அமைப்பதற்கு வைப்பு செய்யப்பட்டுள்ளது. நானாட்டான் கடைத்தொகுதியில் கிடைக்கப்பெறும் நன்மதிப்புத் தொகையிலிருந்து வங்காலை உப அலுவலகப் பிரிவில் பொதுச் சந்தை அமைப்பதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# உறுதிகொண்ட நெஞ்சினாள்' நூல் வெளியீட்டு விழா

முன்னாள் தினகரன் உதவி ஆசிரியர் அமரர் வ. சிவஜோதியின் 51ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 'உறுதிகொண்ட நெஞ்சினாள்' நூல் வெளியீடும் ஞாபகார்த்த விருது வழங்கல் நிகழ்வும் நாளை (20) ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி , திருநகர் லிற்றில் எய்ட்டில் நடைபெறவுள்ளது. தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக மாணவி வர்ஷனா வரதராசா நிகழ்த்தவுள்ளார். நூலின் முதற்பிரதியை செல்வி அபிலாஷா தேவராஜா (ஆசிரியர் ) பெற்றுக்கொள்வார்.

# 12 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை

## திருநெல்வேலி சிறுவர் இல்ல காப்பாளர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்.திருநெல்வேலியில் சிறுவர் பராமரிப்பு இல்லத்திலிருந்த 12 வயதுச் சிறுவனை பாலியல் ரீதியில் துன்புறுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இல்லத்தில் காப்பாளராகப் பணியாற்றும் 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய சிறுவனிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கிழக்கின் குரல்



# கண்ணகி கிராம மக்கள் எதிர்நோக்கும் குடிநீர், யானை பிரச்சினைகளுக்கு தீர்வு

## ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் தலைமையில் கூட்டம்

**வாச்சிக்குடா விசேட நிருபர்**



ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்ணகி கிராம மக்கள் இதுவரைகாலமும் எதிர்நோக்கி வந்த குடிநீர் மற்றும் காட்டு யானைத் தாக்குதல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான கூட்டமொன்று கண்ணகி கிராமத்தின் விளையாட்டு மைதானத்தில் நேற்று (18) நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இராணுவ உயர் அதிகாரிகள், வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள், பல்வேறு சமூக அமைப்புகளின் தலைவர்கள், பொதுமக்களாகிய பலரும் கலந்துகொண்டனர்.

கண்ணகி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பல வருடங்களாக குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்குவதுடன், சுத்தமான குடிநீரின்றி பல்வேறு நோய் உள்ளிட்ட சுகாதாரச் சீர்கேடுகளை அனுபவித்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு மத்தியில் அச்சமான சூழ்நிலையில் அம்மக்கள் வாழ்ந்து வருவதுடன், சில சந்தர்ப்பங்களில் யானைகளின் தாக்குதல்களால் உயிரிழப்புகளையும் தமது உடைமை இழப்பையும் சந்தித்து வருகின்றனர். அக்கிராமத்தில் அண்மையில் இடம்பெற்ற யானையின் தாக்குதலால் குடும்பப் பெண்ணொருவரின் உயிரிழப்புடன் மூன்றாவது உயிரிழப்பையும் அம்மக்கள் சந்தித்துள்ளனர்.

இக்கூட்டத்தின்போது, குடிநீர் மற்றும் காட்டு யானைத் தாக்குதல் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காணும் வகையில் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், பனங்காட்டுப் பிரதேசத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் குடிநீர் இணைப்பை பொதுமக்களின் பங்களிப்புடனும் நன்கொடையாளர்களின் உதவியுடனும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மூலமாக பெற்றுக்கொள்வதற்கு தீர்மானம் எட்டப்பட்டது.

இதேவேளை, காட்டு யானைத் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினரின் உதவியுடன் பொதுமக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களை குழுவாக இணைத்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் தீர்மானம் எட்டப்பட்டது.

இதன்போது, வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் கோரிய நிலையில், அதற்கும் இணக்கம் எட்டப்பட்டது.

மேலும், யானை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் அரசியல்வாதிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று அரசாங்கத்தின் உதவியை பெற்றுக்கொள்ளவும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

# மட்டு. மாநகரசபையின் முன்னாள் முதல்வர்களுக்கு கௌரவிப்பு



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மட்டக்களப்பு மாநகர சபையில் முன்னாள் முதல்வர்களாக பதவி வகித்தவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னாள் முதல்வரும் ஊடகவியலாளருமான செழியன் ஜே.பேரின்பநாயகத்தின் சிறுவர் பூங்காவுக்கு சுற்றுமதில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டிக்கழியில் அமைந்துள்ள இப்பூங்காவுக்கு சுற்றுமதில் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி. சரவணபவன் தலைமையில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டு பாதீட்டுக்கமையவும் அமிர்தகழி வட்டார உறுப்பினர் சசிகலா விஜயதேவாவின் முன்மொழிவுக்கமையவும் இச்சுற்றுமதில் நிர்மாணிப்பதற்காக 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகர சபையாக இருந்து திண்மக் கழிவகற்றல் முதல் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைச் செய்து வந்த நிலையில் நகர சபையின் வினைத்திறனான சேவைகள், வருமானம், சனத்தொகை, இடப்பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் 1967 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அமைச்சினால் மட்டக்களப்பு மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டதுடன், அம்மாநகர சபையின் முதலாவது முதல்வராக செல்லையா இராஜதுரை தெரிவாகி 1968ஆம் ஆண்டு வரை பணியாற்றியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, 1968 ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டு வரை ஜே.எல். திசவீரசிங்க, 1971ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டு வரை க.தியாகராஜா, 1982ஆம் ஆண்டு முதல் இரா அம்பலவாணர், 1994ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரை செழியன் ஜே.பேரின்பநாயகம், 2008ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை சிவகீதா பிரபாகரன் ஆகியோர் முதல்வர்களாக கடமை புரிந்ததுடன், 2018ஆம் ஆண்டு முதல் தற்போது வரை த.சரவணபவன் கடமை புரிந்து வருகின்றார்.

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 71 வர்த்தகர்களுக்கு அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறையில் கடந்த ஒக்டோபரில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 71 வர்த்தகர்கள் மீது நீதிமன்றங்களினால் 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, அம்பாறை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பகுதிகளில் 74 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து, நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட 69 வழக்குகளில் மேற்படி வர்த்தகர்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்ககள் மீதே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

# மட்டு. - கொழும்பு ரயிலுடன் ஜீப் வண்டி மோதி விபத்து

## சாரதி படுகாயம்

**காரைதீவு குறூப் நிருபர்**





மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதுண்ட ஜீப் வண்டியொன்று பலத்த சேதமடைந்ததுடன், மேற்படி ஜீப் வண்டியை செலுத்தி வந்த சாரதி படுகாயமடைந்ததைத் தொடர்ந்து, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முறக்கொட்டாஞ்சேனை, தேவபுரப் பகுதியில் நேற்று (18) காலை இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. பாதுகாப்பற்ற ரயில் கடவையால், குறுக்காக ஜீப் வண்டி வந்தபோதே, இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இவ்விபத்தின்போது, ரயிலின் முன் பக்கம் சிறிதளவில் சேதமடைந்துள்ளது.

இவ்விபத்தைத் தொடர்ந்து, மேற்படி ரயில் சுமார் ஒரு மணி நேரம் தாமதித்து மீண்டும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

இவ்விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# சிந்தனைகள் நூல் வெளியீடு



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

இஸ்லாமிய சிந்தனை முத்திங்கள் ஆய்வுச் சஞ்சிகையில் சுமார் 40 வருடங்களாக மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரியினால் தொடராக எழுதப்பட்ட சிந்தனைகளை தொகுத்து, மருதமுனை ஆசிரியர் நௌபாஸ் ஜலால்தீன் எழுதிய 'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரியின் சிந்தனைகள்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட றாபிததுன் நளீமிய்யீன் ஏற்பாட்டில் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில், அம்பாறை மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் இஸ்ஹாக் தலைமையில் நடைபெற்றது.

பேருவளை ஜாமியா நளீமிய்யா இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி உஸ்தாத் அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பழீல் (நளீமி) பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீடாதிபதி பேராசிரியர் அஷ்ஷெய்க் எஸ்.எம். எம். மஸாஹிர் நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை மருதமுனை ஜாஹி வீவர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அல்ஹாஜ் டாக்டர் எம்.ஐ உபைதுர் ரஹ்மான் பெற்றுக்கொண்டார்.

# பழுதடைந்த இறைச்சியை விற்றவருக்கு அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் பிரதேசத்தில் பழுதடைந்த மாட்டிறைச்சியை விற்பனை செய்த ஒருவருக்கு 10,000 ரூபா அபராதம் விதித்து பொத்துவில் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பழுதடைந்த மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் கடந்த 16ஆம் திகதி வழங்கிய தகவலைத் தொடர்ந்து, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி எம். எஸ்.அப்துல் சமட் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, பழுதடைந்த மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருந்தமை தெரியவந்ததுடன், அம்மாட்டிறைச்சியை கைப்பற்றி அழித்ததாகவும், பொத்துவில் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மலீக் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பழுதடைந்த மாட்டிறைச்சியை வைத்திருந்த குற்றச்சாட்டில் மேற்படி நபருக்கு எதிராக பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அந்நபர் மீது அபராதம் விதிக்கப்பட்டது.

# போதைப்பொருள் அற்ற சமூகம்; மண்முனை வடக்கில் செயலமர்வு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர், மட்டக்களப்பு விசேட நிருபர்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து 'போதைப்பொருள் அற்ற சமூகம்' எனும் தொனிப்பொருளில் மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலக ரீதியில் சமூகம்சார் பாதுகாப்பு முறைமை தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது, மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் போதைப்பொருட்களை கட்டுப்படுத்துதல் தொடர்பாக, கிராம மட்டத்தில் கடமையாற்றுகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

இவ்வாறான செயலமர்வொன்று, மண்முனை வடக்குப் பிரதேச செயலக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஒழுங்கமைப்பிலும் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையிலும் டேபோ மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது.

# நெறியாளுகை கருத்தரங்கில் பங்குபற்றியோருக்கு சான்றிதழ்



**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 சிவில் அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் அவர்களின் செயற்பாட்டு படிமுறை, நிர்வாகக் கட்டமைப்பு, நிதிக் கையாளுகை தொடர்பான நெறியாளுகைக் கருத்தரங்கு 3 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பமாகியிருந்த நிலையில், இதன் இறுதி நிகழ்வாக ஒவ்வொரு அமைப்புக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் நிதி அனுசரணையில் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேஷன், கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கமைப்பில் நேற்று முன்தினம் ( 17 ) இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திருகோணமலை மாவட்ட அரச அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம கலந்துகொண்டார்.



சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள கமு/சது/ றாணமடு இந்துக் கல்லூரி மாணவர்களின் நலன் கருதி அப்பாடசாலை நூலகத்துக்கு ஒருதொகை நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நேற்று (18) நடைபெற்ற பாடசாலை ஒன்றுகூடலின்போது, இந்நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் அ.ஆனந்த, தனது சொந்த நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்த நூல்களே இவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட்டன. (படம்: துறைநீலாவணை நிருபர்)

# மூதூரில் 'கடலோரப் பாதை' சிறுகதை வெளியீட்டு நிகழ்வு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் முதுபெரும் எழுத்தாளரும் கவிஞருமான மூதூர் முகைதீன் எழுதிய 'கடலோரப்பாதை' சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா இன்று (19) மூதூர் பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை அதிகாரி எம்.சி.எம்.ஷெரீப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், நூல் அறிமுகத்தை ஓய்வுநிலை அதிபர் ஏ.எஸ்.உபைத்துல்லாஹ்வும் நயவுரையை ஆசிரியர் ஏ.எஸ்.அப்துல்லாஹ்வும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இலக்கிய சுவைஞர்களாகிய பலரும் கலந்து கொள்கின்றனர்.

# கண் சத்திர சிகிச்சை முகாம்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் 50 பேருக்கு இலவசமாக கண் வில்லை பொருத்தும் சத்திர சிகிச்சை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய கண் வைத்தியசாலை மருத்துவக் குழுவினால் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில், கண் வில்லை பொருத்துவதற்காக 135 பேர் தெரிவு செய்யப்பட்ட நிலையில், 50 பேருக்கு இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் இணைந்து பிராந்திய பணிப்பாளர், டொக்டர். ஐ.எல்.எம்.றிபாஸின் அயராத முயற்சியின் பலனாக ஷபாப் பௌன்டேசன் அனுசரனையில் இச்சத்திர சிகிச்சை நடத்தப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கிழக்கின் குரல்



## கிழக்கில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### மாகாண ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமை யில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (17) நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, சுற்றுலா பகுதிகளிலுள்ள ஹோட்டல் உரிமையாளர்களின் முகாமைத்துவ மேம்பாடுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் தெரிவிக்கையில், முதலில் திருகோணமலை தொடக்கம் நிலாவெளி வரையான பிரதான வீதிக்கு மின் விளக்குகளை மின்சார சபை பொறுப்பேற்க வேண்டுமென்பதுடன், இதுவரைகாலமும் பொருத்தப்படாமலுள்ள வீதி மின்விளக்குகள் பொருத்துவதற்கும் அவசியமான இடங்களில் மின்விளக்குகள் பொருத்துவதற்கும் தேவையான வீதி மின்விளக்குகளை கொள்வனவு செய்வதற்கும் தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கும் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தை பிரதான வீதிகளில் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.



மேலும், எமது சபையின் எல்லைக்குட்பட்ட பிரதான சுற்றுலாத்தலமான புறாமலை பகுதிக்கான கட்டண அறவீடுகளை வனஜீவராசிகள் திணைக்களமே நீண்டகாலத்திலிருந்து அறவிடுவதால், குச்சவெளிப் பிரதேச சபைக்கு இதனால் எவ்வித வருமானமும் கிடைக்கப் பெறுவதில்லை.

எனவே, புறாமலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அறவிடப்படும் வருமானத்தில், ஒரு பகுதியை குச்சவெளிப் பிரதேச சபைக்கு பெற்றுத்தர தாங்கள் ஆவண செய்ய வேண்டுமெனவும், குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் கோரினார்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின்

## தகவல் முகாமைத்துவ தரவுத்தளம் அங்குரார்ப்பணம்

**கந்தளாய் தினகரன் நிருபர், முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் தகவல் முகாமைத்துவ தரவுத்தளம், மாகாண பிரதிப் பிரதம செயலக கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, தகவல் முகாமைத்துவ தரவுத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இதன்போது, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் நாகராஜா தனஞ்ஜெயனினால், தகவல் முகாமைத்துவ தரவுத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் நோக்கம் பற்றியும் தரவுத்தளத்தில் எவ்வாறு உள்நுழைதல் மற்றும் பதிவுகளை எவ்வாறு இடுதல் பற்றியும் விளக்கமளித்தார்.

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் தகவல் முகாமைத்துவ முறைமையில் தரவுத்தளத்தில் கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தரவுகளை பதிவேற்றம் செய்ததில் மாகாணத்தில் முதல் 10 இடங்களைப் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

## ஆசிரியர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வு



**தோப்பூர் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய, திருகோணமலை மாவட்ட ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் திறவுகோல் தொடர்பான ஐந்து நாள் செயலமர்வு, திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 14ஆம் திகதி இச்செயலமர்வு ஆரம்பமாகி நேற்று (18) பூர்த்தியடைந்தது. இதில் மூதூர், கிண்ணியா, திருகோணமலை, திருகோணமலை வடக்கு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 50 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வுக்கான முழு அனுசரணையையும் youleed நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள்



**சாய்ந்தமருது விசேட நிருபர்**

இம்முறை கல்முனைக் கல்வி வலயத்திலிருந்து தரம் ஐந்து புலமைப்பரிசில் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களை இலவசமாக ஈ.டீ யு.ப்ரீ அகடமி நிறுவனம் வழங்கி வைத்துள்ளது.

இரண்டாம் கட்டமாகவே இவ்வினாத்தாள்கள் நேற்று (18) வழங்கப்பட்டன.

ஏற்கெனவே முதலாம் கட்டமாக கல்முனைக் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## ஆளுமை விருத்தி செயலமர்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



காத்தான்குடி அல் ஜாமிஅதுஸ் ஸித்தீக்கியா பெண்கள் அரபுக் கல்லூரியில் ஆளுமை விருத்தி செயலமர்வை முடித்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

காத்தான்குடி நகர சபையினால் இந்த ஆளுமை விருத்தி செயலமர்வு நடத்தப்பட்டதுடன், இதற்கான நிகழ்வு அக்கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது. இந்த செயலமர்வின் மூலம் மாணவிகளின் ஆளுமை விருத்தியை மேம்படுத்த முடிந்துள்ளதாக, காத்தான்குடி அல் ஜாமி அதுஸ் ஸித்தீக்கியா பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அப்துல் கபூர் மதனி தெரிவித்தார்.

## மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு, அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் நேற்று (18) சிரமதானம் செய்து வைக்கப்பட்டது. இச்சிரமதானத்தில் முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், மாவீரர் பணிக்குழுவினர், பொதுமக்களாகிய பலரும் பங்கேற்றிருந்தனர்.

(படம்: காரைதீவு குறூப் நிருபர்)

## தம்பலகாமத்தில் 20 பயனாளிகளுக்கு வவுச்சர்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 20 பேருக்கு உலர் உணவுகளை பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்கள் நேற்று (17) வழங்கி வைக்கப்பட்டன.

ஒபர் நிறுவனம் ஊடாக தலா 19,500 ரூபா பெறுமதியான வவுச்சர்களே உரிய பயனாளிகளிடம் இவ்வாறு வழங்கப்பட்டதுடன், அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான பட்டியலும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## பலாச்சோலை குடும்பத்துக்கு வீடு கையளிப்பு



**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி பலாச்சோலை கிராமத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பமொன்றுக்கு அகிம்சா சமூக நிறுவனத்தின் உதவியுடன் வீடொன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அகிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜாவின் முயற்சியினால், கனடாவிலுள்ள ஐயப்பன் பக்தர்களின் நிதிப் பங்களிப்புடனும் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் அனுமதியுடனும் அக்குடும்பத்துக்கு இவ்வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 9 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள இவ்வீட்டை, உரிய குடும்பத்திடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றது. இவ்வீட்டுக்கான பத்திரமும் பயனாளியிடம் கையளித்து வைக்கப்பட்டது.

அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் அமைக்கப்பட்டுள்ள 50ஆவது வீடு இதுவாகும்.

## மட்டு., அம்பாறையில் விஷ ஜந்துகள் நடமாட்டம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மழையுடனான காலநிலைக்கு மத்தியில் மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் விஷ ஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் தாம் அச்சமடைந்துள்ளதாகவும், பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன், நீரில் அடித்து வரப்பட்ட பாம்பு, முதலை உள்ளிட்ட விஷ ஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதேவேளை, மேற்படி மாவட்டங்களில் மீள்குடியேற்றக் கிராமங்களில் வசிக்கும் சிலர் பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளதாகவும், அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சமுர்த்தி உதவி பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கு கண் சிகிச்சை



**சவளக்கடை குறூப் நிருபர்**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களிலுள்ள சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் சமுர்த்தி மகா சங்க கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) நடத்தப்பட்டது. இதன்போது, சாய்ந்தமருது 17 கிராம அலுவலகர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 51 சிரேஷ்ட பிரஜைகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டதுடன், அவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் விரைவில் வழங்கி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில் சிறந்த பாடகருக்கான விருது

**காரைதீவு குறூப் நிருபர்**



கிழக்கு மாகாணக் கலாச்சார திணைக்களம் நடத்திய கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான சிறந்த பாடகர் போட்டியில், சிரேஷ்ட உத்தியோகத்தர்களில் தெரிவாகிய சிறந்த பாடகர்களுள் ஒருவராக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்திடமிருந்து அவர் விருது பெற்றுக்கொண்டார்.

இவ்விருது வழங்கும் விழா நேற்று (18) திருகோணமலை உவர்மலை விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது, வெற்றி பெற்ற அனைவருக்கும் விருதுகளும் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை இம்மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரஸாக் உத்தரவிட்டுள்ளார்.

37 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளர்.

இது தொடர்பில் திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்படி நபரை பொலிஸார் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 22 கிராம் ஐஸ் போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, அவரை நேற்று (18) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே, இவ்விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என, பொலிஸார் தெரிவித்தனர்.

## வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் அப்பாடசாலையின் அதிபர் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் நடைபெற்றது.

அப்பாடசாலையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி அஷ்ஷேய்ஃக் எஸ்.எம். ஐயூப் (நளீமி) கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் 'அல்கலமிய்யா' எனும் பெயரில் மாணவர் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும் சுவர்ச் சஞ்சிகையொன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

## ஹெரோயினுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இராகசிய தகவலை அடுத்து, ஹெரோயின் போதைப் பொருளுடன்மேற்படிநபரைக்கைது செய்ததுடன், அவரிடமிருந்து 340 மில்லி கிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளனர்.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (17) மேற்படி நபரை ஆஜர்படுத்திய போதே, அவருக்கு இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.



2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 நவம்பர் 19 சனிக்கிழமை

# பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டி கட்டாரில் நாளை ஆரம்பம்

பிஃபா உலகக் கிண்ண கால்பந்துப் போட்டி கட்டாரில் நாளை (20) ஆரம்பமாகும் நிலையில் போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

அல் பைத் அரங்கில் நாளை நடைபெறும் ஆரம்ப விழாவுக்கு பின்னர் முதல் போட்டியில் போட்டியை நடத்தும் கட்டார் மற்றும் ஈக்வடோர் அணிகள் மோதவுள்ளன.

இம்முறை உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் 32 அணிகளும் கட்டாரை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளன. ஏற்கனவே மொரோக்கோ, துனீஷியா, இங்கிலாந்து, ஆர்ஜன்டீன அணிகள் கட்டாரை சென்றடைந்திருக்கும் நிலையில் மெக்சிகோ, கனடா மற்றும் ஜப்பான் அணிகள் நேற்று கட்டாரை அடைந்தன.



உலகக் கிண்ணத்தை ஒட்டி உலகெங்கும் இருந்து இலட்சக்கணக்கான ரசிகர்கள் சிறிய நாடான கட்டாருக்கு படையெடுத்து வருகின்றனர். அணிகள் இருக்கும் ஹோட்டல்களுக்கு வெளியே ரசிகர்கள் கொடிகளை அசைத்த வண்ணம் கூடி கோசங்களை எழுப்பி வருகின்றனர்.

நாளை ஆரம்பமாகும் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் வரும் டிசம்பர் 3ஆம் திகதி வரை நீடிக்கவுள்ளது. இதில் 32 அணிகளும் நான்கு அணிகள் கொண்ட எட்டுக் குழுக்களாக பிரிக்கப்பட்டு முதல் சுற்றில் ஆடும். தொடர்ந்து ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் ‘16 அணிகள்’ சுற்றுக்கு முன்னேறும். நொக் அவுட் போட்டிகளாக நடைபெறும் 16 அணிகள் சுற்றில் வெற்றிபெறும் அணிகள் காலிறுதிப் போட்டிக்கு முன்னேறவுள்ளன. பிஃபா உலகக் கிண்ண இறுதிப் போட்டி டிசம்பர் 18 ஆம் திகதி லுசைல் அரங்கில் நடைபெறவுள்ளது.

இம்முறை உலகக் கிண்ணத்தில் உலகின் முன்னணி நட்சத்திர வீரர்களான ஆர்ஜன்டீனாவின் 35 வயதான லயனல் மெஸ்ஸி, போர்த்துக்கலில் 37 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது கடைசி உலகக் கிண்ணத் தொடரில் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

வலுவான அணிகளாக பிரேசில், ஆர்ஜன்டீனா களமிறங்குவதோடு, ஐரோப்பாவின் நடப்புச் சம்பியன் பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் அணிகளும் வெற்றிவாய்ப்பு அதிகம் கொண்ட அணிகளாக கருதப்படுகின்றன.

## உலகக் கிண்ணத்தில் இருந்து சாடியோ மானே வெளியேற்றம்



பயேர்ன் முனிச் கழகத்திற்காக ஆடும்போது கணுக்கால் காயத்திற்கு உள்ளான செனகல் வீரர் சாடியோ மானே உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

30 வயதான மானே உலகக் கிண்ண முதல் போட்டியில் ஆடமாட்டார் என்று செனகல் கால்பந்து சம்மேளனம் கடந்த செவ்வாய்க்கிழமை கூறியிருந்தது.

எனினும் கடந்த புதன்கிழமை அவரின் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் சோதனை பூர்த்தியடைந்த நிலை யில் சத்திரசிகிச்சை அவசியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த நவம்பர் 8 ஆம் திகதி நடைபெற்ற வெர்டர் பெர்மன் அணிக்கு எதிரான போட்டியின்போதே மானேவுக்கு காயம் ஏற்பட்டது. அடுத்த சில நாட்களில் மியுனிச்சில் அவர் தனது சிகிச்சைகளை ஆரம்பிப்பார் என்று பயேர்ன் முனிச் கழகம் குறிப்பிட்டுள்ளது.

நெதர்லாந்துக்கு எதிராக வரும் திங்கட்கிழமை நடைபெறும் போட்டியுடன் செனகல் தனது உலகக் கிண்ணத்தை ஆரம்பிக்கிறது.

## ரொனால்டோ இல்லாமல் போர்த்துக்கலுக்கு வெற்றி



ரொனால்டோ இன்றி நைஜீரிய அணிக்கு எதிரான உலகக் கிண்ண பயிற்சிப் போட்டியில் களமிறங்கிய போர்த்துக்கல் அணி 4–0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

போர்த்துக்கலின் ஜோஸ் அல்வாடோ அரங்கில் கடந்த வியாழக்கிழமை (17) நடைபெற்ற இந்தப் போட்டியில் சுகவீனம் காரணமாக 37 வயதான ரொனால்டோ பங்கேற்கவில்லை. எனினும் போட்டியின் முதல் பாதியில் ப்ரூரோ பெர்னாண்டஸ் இரட்டை கோல் புகுத்தியதோடு, கொன்காலோ ராமோஸ் மற்றும் ஜொவாவோ மரியோ கடைசி நேரத்தில் கோல்களை புகுத்தினர்.

கட்டாரில் நாளை (20) ஆரம்பமாகும் பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் போர்த்துக்கல் அணி வரும் நவம்பர் 24 ஆம் திகதி தனது முதல் போட்டியில் கானாவை எதிர்கொள்ளவுள்ளது.

தனது நாட்டுக்காக அதிக சர்வதேச போட்டிகளிலும் உலகில் அதிக சர்வதேச கோல்களையும் (117) பெற்றிருக்கும் ரொனால்டோ ஐந்தாவது தொடராக இம்முறை உலகக் கிண்ணத்திலும் பங்கேற்கவுள்ளார்.

## முதுநிலை தடகள போட்டியில் பீப்பள்ஸ் லீசிங் ஐந்து தங்கம்



இரண்டாவது முதுநிலை தடகள சம்பியன்ஷிப் போட்டியில் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனம் 5 தங்கம் உட்பட 14 பதக்கங்களை வென்று திறமையை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை தெற்கு முதுநிலை தடகள சங்கம் ஏற்பாடு செய்த இந்தப் போட்டி மாத்தறை, கோட்டாவிலவில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் பீப்பள்ஸ் லீசிங்கின் கோவிந்த சதீப ஆடவர் பிரிவில் ஈட்டி எறிதல், குண்டு எறிதல் மற்றும் பரிதி வட்டம் எறிதல் ஆகிய போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றதோடு ஆடவர் திறந்த பிரிவில் சம்பியனாகவும் தெரிவானார்.

45 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் வஜிர ராமநாயக்கவும் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் ஷெர்மன் பெர்னாண்டோவும் தங்கம் வென்றனர்.

## விம்பிள்டனில் இருண்ட ஆடைகளுக்கு அனுமதி



அடுத்த ஆ ண்டின் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் பெண் வீராங்கனைகள் இருண்ட நிறம் கொண்ட அரைக் கால்சட்டையை அணிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மாதவிடாய்க் காலத்தின்போது வெள்ளை அரைக் கால்சட்டையை அணிவது குறித்த பெண் விளையாட்டாளர்களின் அக்கறையைக் கருதி அந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து விளையாட்டாளர்களும் வெள்ளை ஆடைகளை மட்டுமே அணிய வேண்டும் என்பது விம்பிள்டனின் விதிமுறையாக இருந்து வந்தது.

அறிவிக்கப்பட்டுள்ள புதிய விதிவிலக்கு விளையாட்டாளர்கள் தங்கள் ஆட்டத்தில் முழுமையாகக் கவனம் செலுத்த உதவும் என்று நம்புவதாக விம்பிள்டன் தலைமை நிர்வாகி சால்லி போல்டன் கூறினார்.

அண்மையில் மான்செஸ்டர் சிட்டி அணி உட்பட சில மகளிர் கால்பந்து அணிகள் பெண்களுக்கான வெள்ளை அரைக் கால்சட்டையைக் கைவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு உபகரணம் வழங்கல்



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக பொத்துவில் வை.எம்.எம்.ஏ. இன் ஏற்பாட்டில் பொத்துவில் நூறுல் ஹுதா அரபுக் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

பொத்துவில் வை.எம்.எம்.ஏ. தலைவர் ஏ. மாபீர் தலைமையில் பொத்துவில் நூறுல் ஹுதா அரபுக் கல்லூரியின் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் மற்றும் பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹிட் எம். ரிஸ்மியினால் விளையாட்டு உபகரணங்களுடன் அலுவலக மேசையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பேரவையின் நிரந்தர அங்கத்துவ உறுப்பினர் எம்.ஐ. உதுமாலெப்பை, அக்கரைப்பற்று சன்றைஸ் ஜெயினுடின், கல்லூரியின் அதிபர் எஸ்.ஐ. அக்பர் ஹசன் பேரவையின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சாமிக்கவின் நீக்கம் தொடர்பில் விளக்கம்



போதிய திறமையை வெளிக்காட்டாததாலேயே ஆப்கான் அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை குழாத்தில் இருந்து சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன நீக்கப்பட்டார் என்று இலங்கை கிரிக்கெட் செயலாளர் மொஹான் டி சில்வா விளக்கம் அளித்துள்ளார். இதன்மூலம் ஒழுக்காற்று விவகாரம் காரணமாக அவர் நீக்கப்பட்டார் என்று எழுந்த சந்தேகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. சாமிக்க கருணாரத்ன டி20 உலகக் கிண்ணப் போட்டியில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு ஆகிய இரண்டு துறைகளிலும் சோபிக்கத் தவறியமை குறிப்பிடத்தக்கது. மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுவதற்காக ஆப்கானிஸ்தான் அணி வரும் செவ்வாய்க்கிழமை (22) இலங்கை வரவுள்ளது.

## பிணையில் இருக்கும் தனுஷ்கவுக்கு ஆஸி. இலங்கை செல்வந்தர் உதவி



கடுமையான நிபந்தனைகளுடன் சிட்னி நீதவான் நீதிமன்றம் ஒன்றினால் கடந்த வியாழக்கிழமை (17) பிணை வழங்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க அவுஸ்திரேலியாவில் உள்ள செல்வந்தரான இலங்கை பிரஜை ஒருவரின் வீட்டில் தங்கியிருப்பதோடு அவரது முகவரியாக அந்த வீட்டு முகவரியே அவுஸ்திரேலிய பொலிஸுக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

150,000 அவுஸ்திரேலிய டொலர் பிணையில் கண்டிப்பான நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டிருக்கும் குணதிலக்கவுக்கு மெல்போர்னில் இருக்கும் பெயர் வெளியிடப்படாத இலங்கை பெண் ஒருவர் இந்தப் பிணையில் முழுத் தொகையையும் செலுத்தியுள்ளார். இந்தப் பெண்ணுக்கும் குணதிலக்கவுக்கும் உள்ள தொடர்பு என்ன அல்லது அவர் வெறுமனே ரசிகரா என்பது பற்றிய விபரம் வெளியாகவில்லை.

பிணை வழங்கப்பட்ட தனுஷ்கவுக்கு சிட்னியில் வாழும் இலங்கையர்கள் பலர் தங்குமிடம் வழங்கவும் அவர் தங்கியிருக்கும் காலத்தில் ஏற்படும் செலவுகளை ஏற்கவும் முன்வந்ததாக நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. மெல்போர்னில் வசிக்கும் இலங்கையர்களும் தனுஷ்கவுக்கு வசதிகளை வழங்க முன்வந்திருந்தனர்.

இதனால் இலங்கை கிரிக்கெட் சபை தனுஷ்கவின் செலவுகளை ஏற்கவில்லை என்றபோதும் அவரது வழக்குக்கான செலவுகளை ஏற்றுள்ளது.

சிட்னி பெண் ஒருவர் மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்கின் அடுத்த விசாரணை வரும் ஜனவரி 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பாலியல் தாக்குதலில் ஈடுபட்டதாக தனுஷ்க மீது நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் பிணையில் இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 6 மணி வரை வீட்டை விட்டு வெளியேறத் தடை, தினசரி பொலிஸில் அறிவிக்க வேண்டும் என பல கண்டிப்பான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

## பயிற்சியாளராக இலங்கை வருகிறார் மிக்கி ஆர்தர்



இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடரில், கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக மிக்கி ஆர்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தர், கோல் கிளேடியேட்டர்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக மீண்டும் இலங்கை வரவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற தொடர் குறித்த அறிவிப்புகளை வெளியிடும் ஊடக சந்திப்பின்போதே மிக்கி ஆர்தர் தொடர்பில், தொடரின் பணிப்பாளர் சமந்த தோதன்வெல அறிவித்தார்.

இம்முறை எல்.பீ.எல் தொடருக்கான அணி உரிமையாளர்களில் எந்தவித மாற்றமும் இல்லை என குறிப்பிட்ட அவர், திட்டமிட்டவாறு டிசம்பர் 6ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை போட்டிகள் நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஓகஸ்ட் மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த எல்.பீ.எல் தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் சில வெளிநாட்டு வீரர்கள் தொடரிலிருந்து விலகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், அவர்களுக்கான மாற்று வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





சர்வதேச ஆற்றுகையாளரும் முதுநிலை ஆடல் ஆசானுமான கலைஞர் வேல் ஆனந்தனின் மதிப்புறு விழா கொழும்பு தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தலைவர் சட்டத்தரணி ந. காண்டீபன் தலைமையில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்வில் ஆடல் ஆசான் வேல் ஆனந்தன் மங்களதீபம் ஏற்றுவதையும், நூலின் முதல் பிரதியை நடராஜா காண்டீபனிடம் இருந்து த. அரியரத்தினம் பெற்றுக்கொள்வதையும் மேல்மாகாணம் தமிழ் பிரிவு பிரதி கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார், இலக்கியக்குழு செயளாலர் தெ. மதுசூதனன் நூல்வெளியீட்டு உரை ஆற்றுவதையும், வட மாகாண ஓய்வு நிலை உதவி கல்விப்பணிப்பாளர் மதிவாணி விக்கினராசா, ஆடல் கல்வி ஆசிரிய ஆலோசகர் பாரதி சிவயோகநாதன், நூலாசிரியர் வேல்ஆனந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும், இடம்பெற்ற தமிழ் வாழ்த்து ஆடல் அளிக்கை, கதகளி ஆடல் என்பவற்றை காணலாம்.

# தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் வி.பி. கணேசன் ஞாபகார்த்த நிகழ்வுகள்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் வி.பி. கணேசன் ஞாபகார்த்த வருடாந்த நிகழ்வுகளில் இரண்டாவது நிகழ்வு இன்று 19ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இன்று புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு (தரம் 5), கொழும்பு 13. கிரிண் லேன், பதுர்தீன் முஸ்லிம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.



தேசிய பாடசாலைகளுக்கான விஞ்ஞான அறிவு போட்டி, சமூக சேளையாளர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோருக்கு வி.பி. கணேசன் ஞாபகார்த்தமாக பொற்மணி செம்மல் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 17.12.2022 அன்று நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் மனோகணேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதற்கான ஒழுங்குகளை மன்ற பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி, தலைவர் நிலாம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அகில இலங்கை சிங்கள, தமிழ் பாடசாலை நாடகப் போட்டி - 2022

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற இலங்கையின் நாடக மத்திய நிலையமான டவர் மண்டப அரங்க மன்றம் கல்வி அமைச்சுடன் இணைந்து அகில இலங்கை ரீதியில் சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கிடையில் நாடகப் போட்டியை வருடாந்தம் நாடளாவிய ரீதியில் நாடகத்தின் முன்னேற்றத்திற்காகவும் படைப்பாற்றல் மிக்க புத்திசாலித்தனமான பிரஜைகளை உருவாக்கும் நோக்கத்துடன் நடாத்துகின்றது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு விண்ணப்பித்துள்ள பாடசாலை நாடக இயக்குனர்கள் எழுத்தாளர்கள் மற்றும் இசை அமைப்பாளர்களுக்கு நாடக இயக்கம் வசனம் எழுதுதல் நாடக இசை பற்றிய அடிப்படை அறிவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நாடக அரங்கியல் குறித்த ஒரு நாள் பயிற்சிப் பட்டறை 22.11.2022 அன்று காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை 'சௌசிறிபாய' இலக்கம் 123 விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள டவர் மண்டப அரங்க மன்றத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் இப்போட்டியில் பங்கு பற்ற விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் காலம் தாழ்த்தாது டவர் மண்டப அரங்க மன்றத்தின் தமிழ் பிரிவு பணிப்பாளர் கலாநிதி. சண்முக சர்மா ஜெயப்பிரகாசின் தொலைபேசி இலக்கத்துடன் (0777911425) தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.



தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வி.பி. கணேசனின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடாத்தப்படும் புலமைப்பரிசில் கருத்தரங்குக்கு பிரதம விருந்தினராக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சிவகுமார் கலந்து சிறப்பித்தார்.

# ஆதி ஸ்ரீ ஐயப்ப ஷேஷத்திரத்தின் ஐயப்ப சேவா சங்க சபரிமலை யாத்திரை

கொழும்பு ,13 இல 69/A ஹின்னி அப்புஹாமி மாவத்தை ஆதி ஸ்ரீ ஐயப்ப ஷேத்திரம் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் நடத்தும் 47 வது ஆண்டு புனித சபரிமலை யாத்திரை தரிசனம்.

கார்த்திகை முதலாம் திகதி (17/11/2022) கணபதி ஓமத்துடன் ஆரம்பமாகியது. இங்கு 30/12/2022ஆம் திகதி கருப்பண்ண சுவாமி பூஜையுடன் அனைத்தும் நிறைவு பெறும். 2023 ஜனவரி மாதம் மூன்றாம் திகதி சுவாமிமார்களுக்கு இருமுடிகட்டு பூஜைகள் இடம்பெற்று பிரதம குருசாமி. பொன். ரவீந்திரகுமரன், குருசாமி இரா.செந்தமிழ்ச்செல்வன், குருசாமி ஆ.சந்திரதாஸ் ஆகியோர் தலைமையில் புனித யாத்திரை ஆரம்பமாகும்'



உடப்பு திவ்ய ஒளி கலை மன்றத்தின் ஏற்பாட்டில் மாதாந்தக் கூட்டம் மன்றத்தலைவர் பா.முருகானந்தன் தலைமையில் உடப்பு இந்து நெறிக்கழக கட்டிடத்தில் வெள்ளிக்கிழமை (18)இடம்பெற்றது. இதன் போது முந்தல் பிரதேச செயலக கலைத்துறைக்குப் பொறுப்பான அதிகாரி என்.பி.எஸ்.நில்மினி கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிலையில் கலைஞர்களின் கலைத்துறை சம்பந்தமாக தனித்தனியாக அறிமுகத்தையும் பெற்றுக் கொண்டார்.மேலும், கலைத்துறை சம்பந்தமாக கலைஞர்கள் எல்லா துறைகளுக்கும் தம்மோடு தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று கூறியதோடு,மாகாண, மாவட்ட,பிரதேச மட்டத்தில் கலைஞர்கள் தங்களின் படைப்புக்களை கூடியதாக தங்களுக்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொண்டார். உடப்பில் ஏராளமான கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கியதை நான் காண்கிறேன்.இதன் போது கலைஞர்களுக்கு தான் கூடுதலான பங்களிப்பைச் செய்ய உள்ளதாகவும் குறிப்பிட்டார். (படம்: உடப்பு குறூப் நிருபர்)



கொழும்பு புதுக்கடை அல் ஹிக்மா வித்தியாலயத்தின் வருடாந்த கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதனை பாடசாலை அதிபரும், சக ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் சேர்ந்து ஏற்பாடு செய்தனர். (படங்கள்:மொஹமட் நசார்)

# அமெரிக்கத் தூதுவர் அமைச்சர் ஹாபிஸ் நசீருடன் பேச்சு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசுங்குடன் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.



கொழும்பில் கடந்த (16) புதன் கிழமை இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்தது. இதில், இருதரப்பு இணக்கப்பாடுகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

சுற்றாடல் சார்பான திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அமெரிக்காவின் ஒத்துழைப்பை வலியுறுத்திய அமைச்சர், காலநிலையை பாதுகாக்கும் சதுப்பு நிலத்திட்டங்கள் குறித்தும், அமெரிக்க தூதுவரின் அவதானத்துக்கு கொண்டு வந்தார். மேலும்,சுற்றாடல் அமைச்சின் செயற்பாடுகளை ஆக்கத்திறனுள்ளதாக்கும் பொருட்டு, அமைச்சின் கட்டடங்களை உச்ச தரத்தில் நிர்மாணிப்பது பற்றியும் இவ்விருவரும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். மேலும், எகிப்தில் நடைபெற்ற காலநிலை மாநாடு இன்னும் இந்தோனேஷியாவின் பாலித் தீவில் நடைபெறும் ஜி 20 மாநாடுகளின் தீர்மானங்களிலும் கவனம் செலுத்தப்பட்டது. பொதுவாக உணவுப் பஞ்சம் குறித்து எச்சரிக்கப்படுவதால் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்தங்களிலும் இச்சந்திப்பு கவனம் செலுத்தியது.

# இந்தியாவின் அடுத்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி எட்டு சதவீதமாக அமையும்

## பொருளாதார நிபுணர்களின் மதிப்பீடு



இந்தியாவின் அடுத்த ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி, அதன் மொத்த உள்ளூர் உற்பத்தி அடிப்படையில், எட்டு சதவீதமாக இருக்கும் என்றும் இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சி சதவீதத்தின் அடிப்படையில் இவ்வாறு அனுமானிக்க முடிகிறது என்றும் இந்தியாவின் மாற்றத்துக்கான 'நித்தி ஆயோக்' திட்டத்தின் முன்னாள் பிரதித் தலைவர் அரவிந்த் பனகாரியா தெரிவித்துள்ளார். கொலம்பியா பல்கலைக்கழகத்தின் இந்திய அரசியல் பொருளாதார பேராசிரியர் ஜக்தீஷ் பகவதி இந்திய பொருளாதார வளர்ச்சி தொடர்பாகக் குறிப்பிடுகையில், எந்தவொரு ஆய்வு அமைப்பின் மதிப்பீட்டைவிட தன்னுடைய பொருளாதார மதிப்பீடு உயர்ந்ததாகவே இருக்கும் என்றும் இந்திய பொருளாதார வளர்ச்சி திருப்திகரமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இந்திய மத்தியவங்கி, பொருளாதார வளர்ச்சி ஏழு சதவீதமாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.2020 நிதியாண்டின் முதல் காலாண்டு வளர்ச்சியைவிட நடப்பாண்டின் முதல் காலாண்டின் வளர்ச்சி குறைவாக இருந்த போதிலும் இரண்டாம் காலாண்டின் வளர்ச்சி 7.5 முதல் எட்டு சதவீதமாகவே அமையும் என்றும் இந்த அடிப்படையில் முழு நிதியாண்டின் வளர்ச்சி எட்டு சதவீதமாகவே இருக்கப்போகிறது என்றும் அரவிந்த் பனகாரியா மதிப்பிட்டுள்ளார். வர்த்தகம், போக்குவரத்து, சுரங்கத்துறை மற்றும் நிர்மாணத்துறைகளில் வளர்ச்சி அதிகமாக இருக்கும் என்று இவர் ஆரூடம் கூறியுள்ளார். இவ்வருடத்தின் முதல் காலாண்டு 12.7 சதவீதமாக பதிவாகியிருப்பது திருப்திகரமான வளர்ச்சிக்கு அடையாளம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அதிக அளவிலான முதலீடுகள் இரண்டாம் பத்தாண்டு காலப்பகுதியில் நல்ல பெறுபேறுகளைத் தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய எல்லையில் சீனாவின் அத்துமீறல்களை அமெரிக்கா உன்னிப்பாக கவனிக்கிறது

## அமெரிக்க உயர் பாதுகாப்பு அதிகாரி தெரிவிப்பு

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான எல்லையில் சீனாவின் தொடர்ச்சியான அத்துமீறல்களை அமெரிக்கா வெகு உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் இவ் விடயத்தில் தாம் இந்தியாவுடன் கருத்துகளை பரிமாறி வருவதுடன் ஒரு தீர்க்கமான புரிதலைக் கொண்டிருப்பதாகவும் புதுடில்லி அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்புத் துறை பொறுப்பாளரான அட்மிரல் மைக்கல் பேக்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று இந்திய பத்திரிகையாளர்களுடன் உரையாடியபோது இவ்வாறு கூறிய அவர், பாதுகாப்பு உபகரணங்களை கூட்டாகத் தயாரித்து விற்பனை செய்யவுள்ளதாக குறிப்பிட்டதோடு தகவல் பரிமாற்றம் மற்றும் உயர்தொழில்நுட்ப விஷயங்களில் இரு நாடுகளும் கூட்டாகப் பணியாற்றுவதாகவும் இது ஒரு கடினமான சவால் என்றும் தெரிவித்தார்.



அமெரிக்க இந்திய பாதுகாப்பு உறவு திருப்திகரமாக உள்ளது. இந்தியாவுடன் நாம் அதிக அளவில் கூட்டு இராணுவ பயிற்சிகளை நடத்தியுள்ளோம்.

தென் சீனக் கடலில் சீனா முரட்டுத்தனமாக நடந்து கொள்வதால் அங்கேயும் அமெரிக்கா நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இந்தோ – பசுபிக் பிராந்தியம் சுதந்திரமாக விடப்பட வேண்டும் என்பதோடு பிராந்திய நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா விரும்புகிறது என்று பத்திரிகையாளர்களிடம் கூறிய மைக்கல் பேக்கர், இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பிலான ரஷ்யாவுடனான இணக்கப்பாடு பற்றி கேட்கப்பட்டபோது, தோழமை கொள்வது இந்தியாவின் விருப்பம் என்று பதிலளித்தார்.

'கடந்த பத்தாண்டுகளில் தன் உறவுகளை விரிவுபடுத்தும் உளப்பூர்வமான முடிவுகளை இந்தியா எடுத்து வந்துள்ளது.

இவ்வகையில் அமெரிக்காவுடன் இணைந்து பலதுறைகளில் ஈடுபடுவதற்கான முடிவை இந்தியா எடுத்துள்ளது. இதை அமெரிக்கா வரவேற்கிறது' என்று கூறிய இவர், உக்ரைன் யுத்தத்தை மொஸ்கோவினால் மேற்கொள்ளப்படும் அநாவசியமான போர் என வர்ணித்தார்.

# இந்திய பங்கு வர்த்தகத்தில் ஐரோப்பிய பங்குச் சந்தை நிறுவனம் தலையிட வேண்டியதில்லை

## இந்திய பங்குச் சந்தை தரப்பு காட்டம்

இந்திய பங்குச் சந்தை முதலீடு, பரிமாற்றம், கொடுக்கல் வாங்கலில் ஆதிக்கம் செலுத்த ஐரோப்பிய வங்கிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை என்று இந்திய நிதிச்சந்தை நிர்வாக அமைப்புகள் உறுதிப்படத் தெரிவித்துள்ளன.

இந்திய பங்குச் சந்தை கூட்டுத்தாபனங்கள் ஐரோப்பிய பங்குச் சந்தை அதிகார சபையுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு உடன்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்தியத் தரப்பால் நிராகரிக்கப்பட்டதையடுத்து இந்திய வங்கிகளுடனான வர்த்தக உறவுகளை ஐரோப்பிய வங்கிகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் துண்டித்துக் கொள்ளும் என மேற்படி அதிகாரசபை காலக்கெடு விதித்தது. ஆனால் இவ்வாறான ஒரு ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடுமானால் இந்திய பங்குச் சந்தையில் தலையிடும், கண்காணிக்கும் மற்றும் தணிக்கை செய்யும் அதிகாரத்தை ஐரோப்பிய வங்கிகள் பெற்றுவிடும் என்று இந்திய பங்குச் சந்தைத் தரப்பு தெரிவிக்கிறது.



இந்திய வங்கிகளின் ஐரோப்பிய தொடர்புகள் துண்டிக்கப்படுமானால் இந்திய பங்குச் சந்தை கூட்டுத்தாபனங்களும் பதில் நடவடிக்கை எடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்திருந்தன.

2013ம் ஆண்டிலும் இவ்வாறான தடையை ஐரோப்பிய யூனியன் விடுத்திருந்தது. அப்போது இந்தியா, ஐரோப்பிய வங்கிகளை பாதுகாவலர் வங்கிகளாகக் கருதும் நடைமுறையை விடுத்து இந்திய வங்கிகள் அமெரிக்கா உட்பட வேறு நாடுகளின் வங்கிகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்வோம் என எச்சரிக்கை விடுத்திருந்தது. டச்சஸ் வங்கி, பீ.என்.பி.பரிபாஸ், கிறடிட் சுவிஸ் போன்ற வங்கிகள் காப்பாளர் வங்கிகளாக தற்போது செயற்பட்டு வருகின்றன.

இந்திய பங்கு பரிவர்த்தனை சபை பன்னாட்டு பங்கு பரிவத்தனை அமைப்புகளில் அங்கம் வகிப்பதாகவும் இந்திய பங்குச் சந்தை நிர்வாகத்தை திறம்பட ஆற்றுவதாகவும் எனவே வெளிநாட்டு தலையீடு அவசியமில்லை எனவும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய கடற்படைத் தளபதி; ஜப்பான் விஜயம் மூன்று முக்கிய இராணுவ நிகழ்வுகளில் பங்கேற்பு

ஜப்பானுடனான மேம்பட்ட இருதரப்பு உறவை மேலும் பலப்படுத்தும் வகையில் இந்திய கடற்படைத் தளபதி ஹரிகுமார் ஜப்பானுக்கு ஐந்துநாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.



இவ்விஜயத்தின்போது இந்தோ பசுபிக் மாநாடு, மேற்கு பசுபிக் கடற்படை மாநாடு மற்றும் மலபார் கூட்டு இராணுவ பயிற்சி என்பனவற்றில் இவர் கலந்து கொண்டிருந்தார். முப்பது நாடுகள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தன.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான மலபார் கூட்டு இராணுவப் பயிற்சி 1992ம் ஆண்டு ஆரம்பமானது. அதன் 30வது வருடப் பயிற்சி, யோகாசூகா கடற்படைத் தளத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் அவுஸ்திரேலியாவும் ஜப்பானும் பங்குபற்றியிருந்தன.

பயிற்சியில் பங்கு பற்றுவதற்காக 'ஷிவாலிக்' மற்றும் 'கமோர்டர்' ஆகிய இரு இந்தியக் கடற்படை யுத்தக் கப்பல்கள் யோகாசூகா துறைமுகத்தைச் சென்றடைந்திருந்தன.

இவை இரண்டும் முற்றிலும் இந்தியாவில் கட்டப்பட்ட யுத்தக் கப்பல்களாகும்.

இந்தோ – பசுபிக் பாதுகாப்பு வலுப்படுத்துதல் தொடர்பான மூன்று முக்கிய நிகழ்வுகள் ஜப்பான் தலைமையில் நடைபெற்றபோது இடம்பெற்ற இந்திய கடற்படைத் தளபதியின் விஜயம் முக்கியமானது என்றும் இது இந்திய – ஜப்பான் பாதுகாப்பு கூட்டிணைவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகவும் பன்னாட்டு பாதுகாப்பு பொறிமுறைகளில் இந்தியாவின் துடிப்பான பங்களிப்பை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# நஷ்டமீட்டும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க நான்கு அடிப்படை அம்சக் கொள்கைகள்

## SLT குழுமத் தலைவர்



இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள தேசிய நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு, சொத்துக்களை விற்பனை செய்வது என்பது இலகுவான தீர்வாக அமைந்திருந்தாலும், நஷ்டமீட்டி வரும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதனூடாக, அவற்றை தூய, அனுபவம் வாய்ந்த கூட்டாண்மை அதிகாரிகளைக் கொண்டு நிர்வகிக்கப்பதனூடாக இலாபமீட்டக்கூடிய வகையில் மாற்றியமைக்க முடியும் என SLT குழுமத் தலைவர் ரொஹான் பெர்னான்டோ தெரிவித்தார். அரச உரிமை நிறுவனங்கள் – அவை முறையாக நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது தவறாக நிர்வகிக்கப்படுகின்றனவா எனும் தலைப்பில் இடம்பெற்ற CMA தேசிய நிர்வாக கணக்கீட்டு மாநாடு 2022 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பெர்னான்டோ இவ்வாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், "பல்வேறு பிரிவுகளில் எமது நாடு பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. தற்போது நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது என்பது பற்றி, நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைப்பது பற்றி கவனம் செலுத்தும் அரசாங்கம், பொருளாதார நிபுணர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் நன்கொடை வழங்குநர்கள் மத்தியில் அதிகளவு பேசப்படும் விடயமாக அமைந்துள்ளது." என்றார்.

அவர் மேலும் விளக்கமளிக்கையில், "எமது நிறுவனத்தை (SLT) உதாரணமாக எடுத்துக் கொண்டால், தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெறுவதற்கு, எமது அடிப்படைக் கொள்கைகளான மோசடி இன்மை, வினைத்திறனை மேம்படுத்துவது, விரயத்தைக் குறைப்பது மற்றும் நிர்வாகத்தை ஈடுபடுத்துவது போன்றன தொடர்பில் அவர்களின் உடன்பாட்டைப் பெற்றோம். ஆம், இந்த நான்கு அம்சங்களையும் முன்வைத்து, எமது ஊழியர்களுடன் எவ்விதமான முரண்பாடுகளுமின்றி எம்மால் இயங்க முடிந்தது." என்றார்.

அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில், "அளவுக்கதிமான சுமையைக் கொண்டுள்ள எமது போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், புகையிரதத் திணைக்களம் நிலையான உட்கட்டமைப்புகளில் பல பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளைக் கொண்டுள்ளது. இந்த தண்டவாளங்களில் எந்த வேகத்தில் புகையிரதங்கள் பயணிக்கின்றன என்பதை நாம் அவதானிக்கின்றோம். ஊழியர்களின் பங்கேற்புடன் இவற்றை விற்பனை செய்ய வேண்டுமா அல்லது மீளமைக்க வேண்டுமா? சிந்திக்க வேண்டிய விடயம். நெரிசலான நேரத்தில் பொதுப் போக்குவரத்து சேவையில் பற்றாக்குறை நிலவுகின்றமை, அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுகின்றமை, நெருக்கடி, போதியளவு திட்டமிடல் இன்மை, எரிபொருள் விரயம் போன்றன தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். தேசிய சுமையிலிருந்து இலாபமீட்டும் முத்தாக மாற்றக்கூடிய ஒரு அரச நிறுவனமாக இது அமைந்துள்ளது." என்றார்.




# Daraz க்கான உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பு பங்குதாரராகிறது Airtel Sri Lanka



இலங்கையின் அதிவேகமாக வளர்ந்து வரும் தொலைத்தொடர்பு சேவை வழங்குநரான Airtel, Daraz 11.11 விற்பனைக்கான 'உத்தியோகப்பூர்வ தொலைத்தொடர்பு பங்குதாரராக' Daraz உடனான தனது மூலோபாய கூட்டாண்மையை அறிவித்துள்ளது.

உள்ளூர் ecommerce நிறுவனமான Daraz.lk உடனான கூட்டாண்மை, 2022 நவம்பர் 11 முதல் 17 வரையிலான விற்பனை மேம்படுத்தல் காலத்தில் Airtel பாவனையாளர்களுக்கு பிரத்தியேக சலுகைகள், கழிவுகள் மற்றும் பரிசுகளையும் வழங்குகிறது.

11.11 விற்பனைக்காக தயாராகியுள்ள, Daraz App எயார்டெல் நெட்வோர்க்கில் 'Whitelisted' செய்யப்பட்டுள்ளது, பாவனையாளர்கள் Appஐ இலவசமாக அணுக முடியும். இதனால் எயார்டெல் நெட்வொர்க்கில் வாங்குபவர்கள் தங்களுக்குப் பிடித்தமான சில்லறை விற்பனையாளர்களை Appல் Browsing செய்ய, டேட்டா கட்டணங்களைப் பற்றி கவலைப்படாமல் தங்கள் Shopping Cartகளை பூர்த்தி செய்யவும் நிறைய நேரம் ஒதுக்குகிறார்கள். இது அனைத்து எயார்டெல் மற்றும் Daraz வாடிக்கையாளர்களுக்கும் ஒரு தனித்துவமான சலுகையாக அமையும்.

அந்த வாரத்தில், புதிய மற்றும் ஏற்கனவே உள்ள எயார்டெல் ரூ.749 பாவனையாளர்களுக்கு தலா ஒரு புத்தம் புதிய ஸ்மார்ட் போனை வெல்லும் வாய்ப்பு கிட்டும். மேலும், புதிய எயார்டெல் ரூ.749 இணைப்பை வாங்கும் வாடிக்கையாளர்கள் நாட்டில் எந்த பகுதிக்கும் இலவச Delivery சலுகையை அனுபவிக்க முடியும்.

# சிறந்த சேவைக்காக இலங்கை வங்கியுடன் ஒப்பந்தம் செய்யும் கார்ப்பரேட்டில் இன்சூரன்ஸ்



1999ஆம் ஆண்டு, இலங்கையில் காப்புறுதி வர்த்தகத்தில் முன்னோடியாக களமிறங்கிய Cooperative Insurance PLC, நகர்ப்புறங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட காப்புறுதிச் சேவையை கிராமப்புற மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளதுடன் தற்போது நாட்டில் குறுகிய காலத்திற்குள் காப்புறுதித் துறையில் அதிகூடிய வளர்ச்சியை பதிவு செய்து காப்புறுதி நிறுவனங்கள் மத்தியில் முன்னோடியாக திகழ்கிறது.

தனது பயணத்தில் மற்றொரு பெருமையான படியை எடுத்துக்கொண்டு, Cooperative Insurance PLC அதன் அதிகபட்ச சேவையை வழங்கும் நோக்கில், நாட்டின் முன்னணி அரசுக்கு சொந்தமான வங்கியான இலங்கை வங்கியுடன் (வாகனம் மற்றும் தீ) காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை ஒக்டோபர் 27ம் திகதி மேற்கொண்டது.

இது இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு Cooperative Insurance PLC, வழங்கும் காப்புறுதி வசதிகளைப் பெறுவதற்கு இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் லீசிங் வசதிகளைப் பெறுவதற்கான திறனை வழங்குகிறது.

83 வருடங்களுக்கும் மேலாக இலங்கையர்களுக்கு நம்பகமான வங்கி வசதிகளை வழங்கி வரும் இலங்கை வங்கியுடன் தமது வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதி வசதிகளை வழங்குவதற்கான பிரதான காப்புறுதியாளராக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட முடிந்ததுடன், இது Cooperative Insurance PLC, பெற்ற மற்றுமொரு வெற்றியாகும் என நிறுவனத்தின் தலைவர் சுசில் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் இவ்வாறான பொருளாதார சவால்களை எதிர்நோக்கும் போது, கார்கள் மற்றும் வீடுகள் போன்ற சொத்துக்களுக்கான குறைந்த காப்புறுதிப் மாதாந்த கட்டுப்பணத்தால் இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் நன்மையடைவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைவதாக Cooperative Insurance நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உதய குமார தெரிவித்தார்.

# செலிங்கோ லைஃப்பின் 2021ஆம் ஆண்டு அறிக்கை சிறந்த ஆண்டறிக்கைகளில் ஒன்றாகத் தெரிவு



செலிங்கோ லைஃப்பின் 2021ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை, அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைந்த CMA அறிக்கையிடல் விருதுகள் 2022இல் ஆண்டின் சிறந்து விளங்கிய ஐந்து சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைகளில் ஒன்றாக அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் தலைமைதாங்கும் நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கை, நிறுவனத்தின் செயல்பாட்டுச் சூழல், உத்தி, செயல்திறன், மதிப்பு உருவாக்கம், நிர்வாகம், இடர் மேலாண்மை மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் ஆகியவற்றின் சுருக்கமான மற்றும் பொருத்தமான கணக்கை முன்வைத்தது, மேலும் ஆபத்தை நீக்குவதற்கான வலுவான நோக்கத்துடன் நிறுவனம் எவ்வாறு முன்னேறியது என்பதை விளக்கும் வகையில் இந்த ஆண்டறிக்கை அமைந்துள்ளது.

2021 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான நிறுவனத்தின் செயல்பாடுகளை உள்ளடக்கிய செலிங்கோ லைஃப்பின் வருடாந்த அறிக்கையின் கண்ணோட்டம், மதிப்பு உருவாக்கம், பணிப்பெண் மற்றும் கூட்டாண்மை ஆளுகை மற்றும் நிதி அறிக்கைகளுக்கான ஒருங்கிணைந்த மூலோபாயத்தை கோடிட்டுக் காட்டும்போது, தேவையான துணைத் தகவல்களுக்கு கூடுதலாக அதன் மூன்று அடிப்படை முன்னுரிமைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்தும் விளக்கியுள்ளது.

"ஒருங்கிணைந்த அறிக்கையிடல் வணிகத்தின் அனைத்து அம்சங்களிலும் வெளிப்படைத்தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்புக்கு இன்றியமையாததாக மாறியுள்ளது மற்றும் நிறுவனங்கள் எண்ணற்ற சவால்களுக்கு பதிலளிக்க வேண்டியிருக்கும் போது, இது போன்ற நேரங்களில் இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது," என்று செலிங்கோ லைஃப்பின் நிர்வாக இயக்குனர் பிரதம நிதி அதிகாரி பாலித ஜெயவர்தன கூறினார். "எனவே எமது வருடாந்த அறிக்கையை இலங்கையின் தேசிய தொழில்முறை முகாமைத்துவ கணக்கியல் நிறுவனமான சிஎம்ஏ ஸ்ரீலங்காவின் நுண்ணோக்கின் கீழ் வைத்து, தேர்வில் சிறந்து விளங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

2013 டிசம்பரில் வெளியிடப்பட்ட சர்வதேச ஈஐசு, கட்டமைப்பில் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி வருடாந்த ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள் போட்டியின் இந்த ஆண்டு 8ஆவது பதிப்பில் பரிசீலிக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. மதிப்பீட்டு செயல்முறை கணக்கியல் மற்றும் நிதித் தகவல்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டது.

குறிப்பிடத்தக்க வகையில், செலிங்கோ லைஃப்பின் 2020 வருடாந்த அறிக்கையும் CMA ஆல் 10 சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டதுடன் நாட்டில் தயாரிக்கப்பட்ட சிறந்த நிதி அறிக்கைகளை அங்கீகரிக்கும் ஊயு ஸ்ரீலங்கா விருதுகளில் 'காப்பீட்டு நிறுவனங்கள்' பிரிவில் கூட்டு வெள்ளி விருதையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவில் கடல்சார் பொறியியல் தீர்வுகளை மேம்படுத்தும் DIMO




இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகை துறைசார்ந்த கூட்டு நிறுவனமான DIMO, மாலைதீவில் தனது கடல்சார் தீர்வுகளை தொடர்ந்தும் மேம்படுத்துவதற்கான திட்டங்களை முன்வைத்துள்ளது. இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரு நாடுகளிலும் MTU, DDC கடல்சார் எஞ்சின்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவை விற்பனையாளரான DIMO, அதன் கடல்சார் பொறியியல் பிரிவான DIMO Marine Solutions மூலம், வெளிநாட்டு கப்பல்கள், அதி சொகுசு படகுகள், ஓய்வு விடுதிகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவுள்ளது. 2017 ஆம் ஆண்டில், மாலைதீவில் கடல்சார் சேவைகளை எளிதாக்குவதற்கு Coastline Investments நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் DIMO நுழைந்தது.

மாலைதீவின் தேசிய படகுச் சங்கத்தின் (NBAM) உத்தியோகபூர்வ கண்காட்சியான (Maldives Marine Expo) மாலைதீவு கடல்சார் கண்காட்சியில் பங்குபற்றியதன் மூலம், மாலைதீவில் தனது கால்தடத்தை விரிவுபடுத்த DIMO மேலும் ஒரு படி முன்னேறிச் சென்றது. இக்கண்காட்சிக்கு மேலதிகமாக, DIMO Marine Engineering Solutions (கடல்சார் பொறியியல் தீர்வுகள்) குழுவானது, பல்வேறு குறிப்பிடத்தக்க தாக்கத்தை மாலைதீவில் ஏற்படுத்தும் வகையிலான சந்தைப்படுத்தல் பிரசாரங்களை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. குறிப்பாக அது கொண்டுள்ள பரந்த அளவிலான கடல்சார் பொறியியல் தீர்வுகள் தொடர்பில், தற்போதுள்ள மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு தெளிவூட்டல்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டிருந்தது. குறித்த பிரசாரங்கள் தொடர்பில் பல்வேறு சாதகமான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளதோடு, DIMO Marine Engineering Solutions குழுவினருக்கு புதிய வணிக வாய்ப்புகளுடன் முன்னோக்கிச் செல்வதற்கான தளத்தையும் அது அமைத்துக் கொடுத்துள்ளது.

குழுமத்தின் கடல்சார் பொறியியல் வணிகத்தை மேற்பார்வையிடும் DIMO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் விஜித பண்டார இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "மாலைதீவில் சுற்றுலாத்துறையானது பொருளாதார வளர்ச்சியின் பிரதான பங்கை வகிக்கின்றது. இதன் காரணமாகவே, கொவிட்19 தொற்று சவால்களைத் தொடர்ந்து இத்தொழில்துறை விரைவான மீட்சியைக் காண்பித்திருப்பது மிகவும் ஊக்கமளிக்கிறது. இத்தொழில்துறை மீண்டும் முன்னேறி வருவதால், ஆடம்பர படகுகள் முதல் கடல்சார்ந்த உணவகங்கள் முகாமைத்துவம் வரையிலான, மாலைதீவின் சுற்றுலா மற்றும் ஓய்வெடுத்தல் பிரிவிலுள்ள, கடல் பொறியியல் துறையில் பல்வேறு வாய்ப்புகள் வருவதை DIMO ஆகிய நாம் அவதானித்தோம். கடந்த 8 தசாப்த கால அனுபவத்தால் உந்துதலளிக்கப்பட்ட DIMO நிறுவனமானது, கடல்சார் பொறியியல் தீர்வுகள் மூலம் இந்த வாய்ப்புகளை ஆராய முழுமையாகத் தயாராகியுள்ளது. எமது இப்புதிய முயற்சிகளின் மூலம், இப்பிராந்தியத்தில் உள்ள சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கு DIMOவினால் உந்துதலை வழங்க முடியுமாக இருக்கும்." என்றார்.

# வன அடர்த்தியை அதிகரிக்க வலுவான அர்ப்பணிப்பை மேற்கொள்ளும் ஹேமாஸ்





இலங்கையில் வீடு மற்றும் தனிநபர் பராமரிப்புத் துறையில் முன்னணியில் உள்ள உற்பத்தியாளரான Hemas Consumer Brands நிறுவனம் இலங்கையின் மழைக்காடு பாதுகாப்பாளர்களான Rainforest Protectors of Sri Lanka உடன் இணைந்து காடுகளை மீள் வளர்ப்பதற்கும் இலங்கையின் மழைக்காடுகளைப் பாதுகாப்பதற்குமான கூட்டு முயற்சியில் மீண்டும் ஈடுபட்டுள்ளது.

2021 இல் முன்னெடுக்கப்பட்ட பலாங்கொடை காடு வளர்ப்புத்திட்டமானது பேபி ஷெரமி, குமாரிகா மற்றும் Rainforest Protectors of Sri Lanka ஆகியோரால் இணைந்து முன்னெடுக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் Hemas Holdings நிறுவனத்தின் அனைத்து வணிகப் பிரிவுகளையும் சேர்ந்த தன்னார்வலர்கள், வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உறுப்பினர்கள், அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆகியோர் இணைந்து காடுகளை மீள் வளர்ப்பதில் தங்களது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இத்திட்டமானது மழைக்காடுகளை புதிய மரங்களால் நிரப்ப உதவுவது மட்டுமல்லாமல், தற்போதுள்ள வனப் பகுதிகள், காடுகளைச் சுற்றி வாழும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை கடுமையான காட்டுத் தீயிலிருந்து பாதுகாக்கவும் உதவுகிறது.

பலாங்கொடை காடு மீள் வளர்ப்பு போன்ற திட்டங்கள், நாட்டு மக்கள் மற்றும் அதிகாரிகளை ஊக்குவிப்பதற்காக எமது வன வளங்களை பாதுகாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களாகும்.


Hemas Consumer Brands ஆனது, இது போன்ற திட்டங்கள் மூலம் Hemas Groups இனது சூழல் தொடர்பான நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளிப்பதோடு, Rainforest Protectors of Sri Lanka உடன் இணைந்து இயற்கையை பாதுகாப்பது தொடர்பான நீண்ட கால முயற்சிகள் மற்றும் இலங்கையில் மழைக்காடுகளை பாதுகாப்பதை ஊக்குவிக்கும் ஏனைய திட்டங்களுடன் இணைந்து தொடர்ச்சியாக செயற்படும்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## நாடக பொம்மை

மேடையின் அரங்கேற்றம்
பாதையையும் மெருகூட்டலாம்
நாட்டிய வடிவமைப்பை
நான் ஒன்றும் இயற்றவில்லை

விதி போடும் மெல்லிசையில்
அயர்ந்து தூங்கி கிடக்க
நான் ஒன்றும் நீங்கள் செதுக்கிய
சிற்பமும் அல்ல சிலையும் அல்ல

புதைந்தே கிடப்பதற்கு
நீங்கள் தரையோடு மிதித்துச்செல்லும்
புற்தரையும் அல்ல
புற்தரையும் வீரிட்டு தழைத்தே தீரும்
மிதமிஞ்சிய மழையின் பின்

புரிந்து கொள்ளுங்கள்
நானும் மனிதன்தான்
அறிந்து கொள்ளுங்கள்
நானும் மனித பிறவிதான்.....

கால்கள் போடும் தாளத்தினை
பாதைகள் உணர்வதில்லை
பாதையின் ரணகளத்தினை
கால்களும் கண்டு கொள்வதில்லை

அனுகவி றிப்கான்
அட்டாளைச்சேனை

## தனிமைக் காதலன்

நினைவுகளால் களவாடப்பட்டு
தனிமையினால் ஈர்க்கப்பட்டு
கல்லறை நோக்கி
தொடர்கிறது நம்
காதல்.

கற்பனையான காதலன்
நானில்லையென்பதால் சொற்ப
காலம் நுழைந்திருந்து
போனது ஏனோ!

கல்லறையோரம் அவள்
கால் தீண்டும்
நேரம் நம்
காதல் கவிதைகள்
பாடும் இவ்
வலிகளைப் பற்றி.

சிறையிடப்பட்ட என்
வாழ்க்கையில் சிறகுடைந்து
கிடக்கிறது இந்த
இன்பம் என்பதை
யாரறிவார்.

இவ்வுலோக காதலன்
என்பதால் இவ்வளவு
காலமாய் காத்திருக்கிறேன்
அவ்வளவு வைராக்கியம்
பிடித்துப் போன
காதலை காண.

பொத்துவில் அஜ்மல்கான்

## கனவுகள் நனவானால்...!!



கனவுகள் வருவதுண்டு அவை
காற்றில் பறப்பதுண்டு!
கடலிலும் வீழ்வதுண்டு!
மின்னலாய் மறைவதுண்டு
மேகமாய் மிதப்பதுண்டு
மழையாய்ப் பொழிவதுண்டு
மண்ணில் கலப்பதுண்டு!
சேற்றில் சிதைவதுண்டு!
சிலவேளை அவற்றிற்கு
கால்கள் முளைப்பதுண்டு!
சிலவேளை அவை
வந்த வேகம் தெரியாமல்
களைந்தும் போவதுண்டு!
இருந்த தாகம் தெரியாமல்
நீங்கிச் செல்வதுண்டு!
கனவுகள் எல்லாம்
நனவுகள் ஆனால்
கடவுளை மறப்பான்
மகிமை மிக்க மனிதன்!
புனிதமும் மறப்பான் அவனே!

கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

## இதயப்பூ தலை கவிழ்ந்து...



உன்னிதழ் இறுக்கமும் பார்வையின் படிவும்
யார் சொன்னது மௌனம் என்று?
அது லட்சம் பூகம்பங்கள்
ஒன்றான சேர்மானம்

உயிரின் மொட்டுக்களை
வெடிக்க வைத்தது
உலக மொழிகளை மறக்கச்
செய்தது உன்னருகாமை

வதனமது கண்டேன்
வாட்டம் தொலைத்தேன்
வெண்மை அழகில்
என்னை இழந்தேன்

உன் விழிகளுக்கு
ஏதித்தனை சக்தி?
வேரோடு சாய்த்து
விழுத்துகிறாள் பாதகத்தி

நெற்றிப் பிறையில்
நெஞ்சம் தைத்தாய்
நேசப் பார்வையால்
சிறையில் அடைத்தாய்

செவியழகு செங்கமலமாய்
சிந்தைக்கு விருந்தாகும்
சிமிக்கிகளோ அசைந்தென்
செவிகளுக்கு இசையாகும்

மெல்லிய இதழ்கள்
மூடியே இருக்கும்
மொழியில்லாத தேசத்தில்
மணிக்கணக்கில் பேசும்

நினைவுப் பனித்துளிகள்
நெஞ்சிலே விஞ்சும்
இதயப்பூ தலைகவிழ்ந்து
தானாக உன்னிடம் தஞ்சம்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

## தொடர் தோல்வி



பாடசாலை செல்லும் வேலை
பாடம் ஏறவில்லை
மணமாலை கொண்ட வேலை
மனமகிழ குழந்தையுமில்லை

வியாபாரம் செய்த வேலை
இலாபமும் காணவில்லை
எழுத நினைத்து எழுதுகையில்
எழுத்தும் கணக்கிலில்லை
பேச நினைத்து பேசுகையில்
பேச்சும் புரியவில்லை

என் திறமை
என்ன தான் தெரியவில்லை
சாதிக்க எண்ணுகின்றேன்
சாமர்த்தியம்
தெரியவில்லை

சாக்கடையில் வீழ்ந்தும்
எழுகின்றேன்
ஏனென்று புரியவில்லை
மக்களும் என்னை
கணக்கில் எடுப்பதாகத்
தெரியவில்லை

இறந்ததும் மக்கள் மனதில் வாழ
வழியுமில்லை
வாரிக் கொடுக்க பணம் பொருள்
என்னிடமில்லை

வாழ்ந்து சாதிக்க
வழிகள் எதுவும் தெரியவில்லை
இருந்தும் முயற்சியை கைவிட
மனம் வரவில்லை

காலம் கடந்து கடலும்
கரை ஒதுங்குகின்றது
பஞ்சமும் விரைந்து
பக்கமாக வந்து நிற்கின்றது
பாதாள உலகமிது
பழி தீர்க்க பார்க்கின்றது

தொடர்ந்தும் தொடராக
தொடர் தோல்வியை காட்டுகின்றது
இவ்வுலகம் மாயை இறைவனை தொழுவதே
மேன்மை

பானு ஜிப்ரீ
சாய்ந்தமருது

## நடந்து கொண்ட போது கடந்து சென்றேன்



யாருக்கும் மாற்றிக் கொள்ளாத
இயந்திரமான இதயங்கள்
அதிகம் என்பதால்
என்னையும் நானும்
மாற்றிக் கொண்டேன்.

நினைத்த மாதிரி
வாழ முடியாத நிலை
சுற்றியிருக்கும்
சூழ்நிலையின் விலை
சுவாசிக்க முடியாத
வாழ்க்கையின் கலை
நிஜத்தில் நிழல்.

சந்தோஷமும் சோகமும்
சேர்ந்து வந்து தாக்கக் கண்டேன்
என்னை ஒருவன்
என் விருப்பத்திற்கான
விண்ணப்பம் செய்யும் பொழுது
பதிலுரைக்காமல்,
காகிதம் கண்ணீர் சித்தம்

காலம் காதல் நித்தம்
சந்தேகமாய் என்னையே
நானும் பார்த்து கொண்டேனே...

எஸ்.பிரஷா
திருகோணமலை

## காமக் கண்கள்



அதோ அந்தச்
சாலையின் ஓரமாய்
நடந்து வருகிறாள் பெதும்பை

அங்கே தூரத்திலிருந்து
இரு கண்கள் அவளின்
ஆடைக்குற் சென்று
உச்சிமுதல் பாதம் வரை முகர்ந்து
அவளைத் தன் கண்களினாலேயே
கர்ப்பிணியாக்கி விடுகிறது.

தமது வீட்டிலும் பெண்கள்
தாயாக, தாரமாக,
உடன்பிறப்பாக, மகளாக
இருப்பதையும் மறந்து...!

பொத்துவில் இஸ்மட்

## தீயது களைவோம்

மணவரை காணும் வரை
மணமகனைச் சொல்லாதே!
பேச்சு வார்த்தைக்கு மூச்சு
யாருக்கும் காட்டாதே!

நட்பென்று யாரும் கண்டு
தீர்வுக்காயழைக்காதே!
உறவென்று நம்பிச் சென்று
உன்னகத்தைப் பகிராதே!

மாற்றானின் கண்ணீரில்
மணம் காணும் பூமியிது!
ஏமாற்றி வெற்றி காண
எய்ப்பார் வாழும் மண்ணுமிது!

கூடித்தான் வாழ வேண்டும்
நமைக் கொண்டாடும் மாந்தருடன்!
தேடித்தான் செல்ல வேண்டும்
அவர் சோகம் கண்டவுடன்!

அரிது அரிது உண்மை
நட்பைக் காண்பதரிது!
சிறிது சிறிது பலர்
உள்ளங்கள் சிறிதிலும் சிறிது!

ஜவ்ஹர்
கிண்ணியா

